உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதந்தோறும் வெளிவரும்

ஒரு தமிழ்ப்பத்திரிகை

"எனைத்தானும் நல்லவை கேட்க வனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்"—திருவள்ளுவர்.

தொகுதி-சக.] சுபானு-ஹு தை மீ [பகுதி-ங.

Vol. 41. January-February 1944 No. 3.

உள்ளுறை.

ஆய்தவெழுத்தின் வரலாறு:-	திரு. நாராயணையங்கார், பத்திராசிரியர்.	அக—அரு
மஹாமஹோபாத்யாய சாமிநாதையரவர்கள்:—	T. K. இராமாநுஜையங்கார், உதவிப்பத்திராசிரியர்.	அஎ—க0
தென்னாட்டில் ஊற்றெடுத்த அன்புப்பெருக்கு வடநாட்டிற்பரவிய வான்முறை:—	சுவாமி விபுலாநந்தரவர்கள்	கக-கசு
கம்பராமாயணசாரம் (உத்தரகாண்டம்):-	ஸ்ரீ. ராவ்ஸாஹிப். வெ. ப. சுப்பிரமணிய முதலியாரவர்கள் G.B.V.C.	கஎ—க0உ
எண்ணும் எழுத்தும்:—	ஸ்ரீ. பண்டித. அ. கோபாலையரவர்கள்	க0ரு—க0அ
மதிப்புரை:—		க0கூ—ககக
மொழிநட்பு:—	ஸ்ரீ. அ. அரங்கசுவாமி ஐயரவர்கள்	ககஉ—கஉ0

பத்திராசிரியர்—திரு. நாராயணையங்கார்.

வருஷம் ஒன்றுக்கு ரூ. 4.] [தனிப்பிரதி அணா—8.

வெளிநாடுகளுக்கு ரூ. 4—8—0.

1944.

Printed by Srimathu R. Shanmuga Rajeswara Naganatha Sethupathy Avl., and Published by Thiru. Narayana Iyengar at the Tamil Sangam Power Press, No. 54, Tamil Sangam Road, Madura.

ஒரு வேண்டுகோள்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதமொருமுறை வெளிவரும் இச்செந்தமிழ்ப்பத்திரிகையில் வெளியிடுமாறு பொருளுரைகளும் மதிப்புரைவேண்டிப் புத்தகம் முதலியனவும் அனுப்புவோர் அவற்றைப் பத்திராசிரியர், செந்தமிழ், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும்,

செந்தமிழில் வெளியிடுமாறு அனுப்பும் விளம்பரங்களையும், பாண்டியன்புத்தகசாலைக்கு நன்கொடையாக அனுப்பும் புத்தகம் முதலியவைகளையும், செந்தமிழ் செந்தமிழ்ப்பிரசுரங்கள் தமிழ்ச்சங்கப் பிரசுரங்கள் சங்கக்கலாசாலை சங்கப்பரீக்ஷைகள் முதலியவை சம்பந்தமாக அனுப்பும் கடிதங்கள் மணியார்டர்கள் முதலியவற்றையும், இன்னும் இச்சங்கசம்பந்தமாயறியவிரும்பியெழுதும் பிறவற்றையும் மானேஜர், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும் அனுப்புமாறு இதன்மூலம் கேட்டுக்கொள்ளலாயிற்று.

லக்ஷ்மீநாராயணையர்,
மானேஜர்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தில் விற்கப்பெறும் புத்தகங்கள்.

I. சங்கப்பிரசுரம்.

		ரூ.	அ.	பை.
1.	ஞானாமிர்த மூலமும் உரையும் ...	1	0	0
2.	சைவமஞ்சரி	1	8	0
3.	*யாப்பணியிலக்கணங்கள்			
4.	வைத்தியசாரசங்கிரகம்	5	0	0
5.	பன்னூற்றிரட்டு	3	0	0
6.	மகாபாரதம் அரும்பதவுரையுடன் ...	4	0	0
7.	*தோத்திரத்திரட்டு			
8.	* தமிழ்ச்சொல்லகராதி உயிர்வருக்கம் முடிய முதற்பாகம்	6	0	0
	* ஷை இரண்டாம்பாகம் ...	4	8	0
	ஷை மூன்றாம்பாகம் ...	5	0	0
9.	*அபிதானசிந்தாமணி			
10.	தொல்காப்பியம் செய்யுளியல் (நச். உரை முதலிய)	1	12	0
11.	திருவருணைக்கலம்பகம்	0	6	0
12.	*அமுதாம்பிகைபிள்ளைத்தமிழ் ...			
13.	கலைசைச்சிலேடைவெண்பா ...	0	6	0
14.	*தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி ...			
15.	திருவாரூர் நான்மணிமாலை ...	0	4	0
16.	ஸ்ரீகிருஷ்ணசரித்திரவிமர்சம் ...	1	4	0
	பன்னூற்றிரட்டு (செலக்ஷன்) ...	0	4	0
	திருவாலவாய்த் திருநீற்றுப்பதிகம் முதலியன	0	1	0

உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி—சக.] சுபானு-ஹூ தைமீ [பகுதி—ஙு.

Vol. 41. January-February 1944 No. 3.

ஆய்தவெழுத்தின் வரலாறு

சென்ற கார்த்திகைமாதத்துச் செந்தமிழ்ப்பத்திரிகையில் ராவ்ஸாஹிப். வித்வான் ஸ்ரீமத். மு. இராகவையங்காரவர்கள் எழுதிய 'ஆய்தவோசை' என்னும் ஆராய்ச்சியுரையில் ஆய்தவெழுத்து யகரவொற்றுயும் ஒலிக்குமென்பதைப் பல தமிழ்நூலாதரவுகொண்டு காட்டியிருப்பது பாராட்டத்தக்கது. அது, இக்காலத்திற் புதுமையாகத்தோன்றுமாயினும், மிகப் பழைமையான வழக்கென்பதைக் காட்டவேண்டி ஆய்தவெழுத்தின் வரலாறு இங்கே எழுதப்படுகிறது. இதற்கு அவர்கள் எழுதிய ஆராய்ச்சியே துணையானமையால் இதன் பயனும் அவர்களையே சார்ந்ததாகும்.

தமிழ்மொழியிலுள்ள எழுத்துக்களுள், தனித்தியங்குமாற்றலுடைய உயிர்வருக்கமும் தனித்தியங்குமாற்றலில்லாத மெய்வருக்கமும் உள்ளன. அவற்றினிடையே ஆய்தவெழுத்து உயிர்வரிக்குப் பின்னும் மெய்வரிக்கு முன்னுமாக நெடுங்கணக்கினுள் வைக்கப்பெற்றுள்ளது.

இது, தனித்தியங்குமியல்பில்லாமையால் மெய்யெழுத்தோடு ஒருவாறொத்தலும், உயிரேறுதற்கு இடமாகாமையால் ஒருவாறு ஒவ்வாமையும் உடையதாம். அவ்வாறே ஓரோவழிச் செய்யுளிடத்து உயிர்போல் அலகுபெறுதலால் உயிரெழுத்தோடொத்தலும் மெய்யூர்ந்துவாராமையால் அவற்றோடு ஒவ்வாமையும் உடையதாம். இவ்விருதன்மையாலும் உயிரோடொட்டியும் மெய்யோடொட்டியும் உயிருமாகாது மெய்யுமாகாது தனியேநிற்கும் ஓரொலிவிசேடமாயிருப்பதுபற்றித் தனிநிலை எனப் பெயர்பெற்றிருக்கிறது. இது காரணக்குறி. இதற்கு வேறு இடுகுறிப்பெயர்களும் உண்டு. அவை: அஃகன்ன, அக்கன்ன; அஃதம், அய்தம், ஆய்தம் என்பனவாம்.

எழுத்துக்களை இடுகுறிப்பெயரால் வழங்குமிடத்து ஒவ்வோரெழுத்துக்கும் அவ்வவ்வெழுத்தொலியே பெயராய் அமையும். இதனை, 'அ ஆ அங்காப்புடைய' என்றற்றொடக்கங்களில் அகர ஆகாரங்களுக்கு அவ்வெழுத்தொலிகளே பெயராக வழங்குதலால் அறியலாம். இனி மெய்யெழுத்துக்களுக்குத் தனித்தியங்குமாற்றலின்மையால் அவை யியங்குமாறு அகரச்சாரியைகொடுத்து, க ங ச ஞ ட ண எனப் பெயர்வழங்கப்படும். இதனை, 'கஙவுஞ்சஞவும் டணவும்' என்பவற்றால் அறியலாம்.

இவ்வாறு தனித்தியங்குமாற்றலில்லாத மெய்யெழுத்துக்களை மொழிமுதலாகவைத்து வழங்கவேண்டுமிடத்து ஏற்றபெற்றி மொழிமுதலாதற்குரிய எழுத்தில் ஒன்றைமுதலில் ஒட்டி அரங்கம் இலங்கை இலாபம் என்றும், 'இடம்பட வீடிடேல்' 'இணக்கமறிந் திணங்கு' 'அழகலாதனசெயேல்' என்றும் வழங்குதல் காண்க.

இவ்வாறே மொழிமுதல் மொழியிறுதி என்னும் இரண்டிடத்தும் இயங்காத தனிநிலையெழுத்திற்கு அவ்வெழுத்தொலிகொண்டே பெயரிடுமிடத்து அவ்வாய்தவெழுத்தின்முன் அகரச்சாரியையும், பின் அன் அ என்னும் துணைச்சாரியையும் கொடுத்து இடையில் தனிநிலையெழுத்தை வைத்தொலிக்க அஃகன்ன என நின்று

அவ்வாய்தவெழுத்துக்குத் தற்சுட்டெழுத்தொலிப் பெயராகும். இதனையே அக்கன்ன என இக்காலத்துச் சிறுவர்களுக்கு நெடுங் கணக்குக் கற்பிக்கும் ஆசிரியர் வழங்கிவருகின்றனர்.

இங்கு அவ்வாய்தவொலியையடுத்துக் ககரவொற்றொலியும் தோன்றுகின்றது. அதன் காரணம் ஆராயின் அஃகன்ன என்னும் ஆய்தவெழுத்தொலி வடமொழியில் உள்ள 'ஜிஹ்வாமூலீயம்' என்னும் எழுத்தொலியோடொத்த பண்புடையதாதலால் அது 'கᳵ கரோதி' என்று ககரத்தை ஒட்டியேநிற்பதுபோல இதுவும் ககர வொற்றை ஒட்டிநிற்பதாயிற்று. அதனை, 'அற்றா லளவறிந் துண்க வகுதுடம்பு' என்றும், 'அற்றா ரழிபசி தீர்த்த லகுதொருவன்' என்றும் அலகுபெறுமிடங்களிற் ககரவொற்றாயொலித்தல்கண் டறியலாம். அல்லாக்கால் தளை சிதையும். இவ்வாறு ககரமாக வொலித்தல் அங்காப்புடன்கூடிய கண்டத்தின் (அடிநாவிடத்தின் முயற்சியாற்பிறக்கும் ஒற்றுமையாலாயிற்று.

அன்றியும், இது, அகரமாகிய தனிக்குறின்முன் ஒற்றாய் அஃ என நின்று, அன்சாரியையுயிர்வர இரட்டிக்குமிடத்துக் ககர வொற்றாயிரட்டித்து அக்கன்ன என ஆயிற்று எனினும் அமையும். இதன்கண் உள்ள ஆய்தம் ககரத்தின் மெத்தெனோசையுடையது. இதனையே அக்கன்ன என வெட்டெனோசையுடையதாயும் வழங் குவதுண்டு. இது பஃது - பத்து ஆவதுபோலும் திரிபாம்.

இனி முன்கூறியவாறே முதலில் அகரச்சாரியையும் இறுதி யில் தம்முச்சாரியையும் கொடுத்து இடையில் ஆய்தவெழுத்தை நிறுத்திப்படிக்க அஃதம் என ஒருபெயராகும். இதன்கண் ஒலிக்கும் ஆய்தவொலி தகரவொற்றின் மெத்தெனோசையுடையது. இது மிகப் பழங்காலத்தில் வழங்கிவந்து வீழ்ந்ததென்று தோன்று கிறது. இப்பெயரில்லாக்கால் இக்காலத்தில் வழங்கும் ஆய்தம் என்னும் பெயரே தோன்றுதற்கு இடமின்றியொழியும்.

இனி அஃதத்தின் ஆய்தம் யகரமெய்யாகத்திரியுமிடத்து அய்தம் என்றாகும். ஆகவே அதுவும் நீண்டகாலவழக்கால் ஒடுவுருபு ஒடுருபாகவும் அதுவுருபு ஆதுருபாகவும் நீண்டிருப்பதுபோலக் குறுமுதல் நெடுமுதலாகி நீண்டவிடத்து ஆய்தம் என்ற பெயர் உண்டாயிற்றென்று அறியக்கிடக்கிறது.

அஃதம் என்னும் பெயர், அய்தமாய்ப் பின்பு அதனை ஆய்தம் என்னும் பெயரால் வழங்கிய தொல்காப்பியர்காலத்துக்கு முற்பட்டிருந்திருக்கவேண்டும்.

அஃதம் என்னும் பெயரில்லாமல் அய்தம் என்னும் பெயர் தோன்றற்பாற்றன்று. ஏனெனில், ஆய்தவெழுத்துநின்றே யகரமாகத்திரியவேண்டுதலின் என்க. அவ்வாறே அய்தம் என்னும் பெயரில்லாமல் ஆய்தம் என்னும் பெயரும் தோன்றற்பாற்றன்று; அதுவே முதல் நீளவேண்டுதலின் என்க. அது யகரமாகத் திரியாது ஆய்தமாய்நிற்குமிடத்து நெட்டெழுத்தடுத்துநிற்கமாட்டாது.

ஆய்தம் ககரவொற்றின் மெத்தெனெலியாற்றிரிவதன்றி யகரவொற்றாகத் திரிதலும் உண்டென்பதற்குக் காரணம்.-ஆய்தவெழுத்தின் இயல்பான ஒலி வடமொழியில் முப்பத்துமூன்றும் மெய்யாகிய ஹ் என்பதன் ஒலியோடொத்த ஒலியாம். அது 'மூன்றேயகவும்' என்ற விதிப்படி யகரமாகவும் ககரமாகவும் திரிதற்குரியதே.* யகரமாகத்திரிதலை ஸஹ்பம்=சய்பம், அஹிம்ஸை=அயிஞ்சை, மஹேசுவரன்=மயேச்சுரன், மஹிஷாசுரன்=மயிடாசுரன்: என்று திரிதலால் அறியலாம். ககரமாகத்திரிதலை மஹீதலம்=மகீதலம்,

---

*'மூன்றேயகவும்' (நன்னூல். சூ 147.) என்பதனை மூன்றே அகவும் எனக் கண்ணழித்து, முப்பத்துமூன்றும்மெய் (ஹ்) அகரமாகவும் ககரமாகவும் திரியுமென்றுகொண்டு, ஹரன்=அரன், மோஹம்=மோகம் என்று

மஹாமேரு = மகாமேரு, மோஹநம் = மோகநம் எனத் திரிதலால் அறியலாம். (நன்னூல். சூ. 147)

இங்குக் கூறியவாற்றால் ஆய்தவெழுத்துக்குப் பலபெயர் தோன்றி நாளடைவில் வீழ்ந்தொழிந்தவாறே ஆய்தவெழுத்தாலியன்ற மிகப்பலவாகிய தமிழ்ச்சொற்கள் நாளடைவில் வீழ்ந்தொழிந்து குறைந்துவருகின்றன. இதனைத் திருக்குறளிற் பயின்றவளவில் ஆய்தம் பிற்காலநூல்களிற் பயிலாது சுருங்கியிருத்தலும் இக்காலநூல்களிற் சிறிதும் பயிலாதொழிதலும் கண்டு தெளியலாம். இதற்குக்காரணம் ஆய்தவெழுத்தைத் தொடர்ந்துநிற்கும் வல்லெழுத்தின் மெத்தெனொலியால் இயல்வதை அவ்வவ் வல்லெழுத்தின் வெட்டெனொலியாக வழங்குதலும், ஆய்தவெழுத்தைக் குறைத்து வழங்குதலும் ஆம். இதனை அஃகன்ன என்ற பெயரை அக்கன்ன எனவும் பஃது என்னும் எண்ணுப்பெயரைப் பத்து எனவும் வழங்குதலாலும், அஃது இஃது உஃது இருபஃது முப்பஃது என்றற்றொடக்கத்து ஆய்தம் பயின்றசொற்களை அது இது உது இருபது முப்பது என்றற்றொடக்கமாக ஆய்தத்தைக் குறைத்துவழங்குதலாலும் அறியலாம்.

புணர்ச்சிவிகாரத்தாற் கஃறீது முஃடீது என்றற்றொடக்கத்துத்திரியும் ஆய்தங்களும் கற்றீது முட்டீது என வல்லொற்றாக மாறுதலும் அது அருகுதற்குக் காரணமாம்.

உதாரணங்காட்டுவாரும் உளர். அது பொருந்தாது. ஏனெனில் ஹகாரமெய் (ஹ்) அகரமாகத்திரிந்தால் அம்மெய்மேலுள்ள அகரத்தோடு இரண்டகரமுடையதாய் ஹர: என்பது அ அரன் என்றும், மோஹநம் என்பது மோ அ அநம் என்றும் ஆகும் என்று உதாரணம் காட்டவேண்டும்; அவ்வாறில்லாமையால் அது பொருந்தாதென்க.

இனி, 'மூன்றேயகவும்' என்பதனை, மூன்றே ய க வும் என்று கண்ணழித்து அச்சூத்திரத்துப் பிறமெய்கள் அரைமாத்திரையுள்ள மெய்களாகவேதிரிந்துவருதல்போல ஹகாரமெய், யகரமெய்யும் ககரமெய்யுமாகத் திரிந்துவருமென்றலே சாலும்.

பஃறாழிசை சிஃறாழிசை பஃறலை முதலியனவும் இனிக் கால அடைவிற் பலதாழிசை சிலதாழிசை பலதலை என மாறி ஆய்த வெழுத்தொலி அருகும்போதும்.

இவற்றால் ஆய்தவெழுத்து இயல்பாகவே கண்டத்தை இடமாகக்கொண்டு பிறக்கும் ஹ் என்னும் மெய்யொலியுடையதென்றும் அவ்விடப்பிறப்பொப்புமையால் ககரமெய்யின் மெத்தெனொலியுடையதாகத் திரியுமென்றும் மற்றும் அவ்விடப்பிறப்பொற்றுமையானே அடிநாவடியிற்றோன்றும் யகரமெய்யாகவும் திரியுமென்றும் காட்டப்பட்டது.

"ஹயவரட்" என்னும் மாஹேசுவரசூத்திரத்திலும் உயிர் வருக்கத்துக்கும் மெய்வருக்கத்துக்கும் இடையே ஆய்தவெழுத்தோடொத்தே, ஹகார யகாரமெய்கள் இணைந்துகிடப்பதும் இங்கு நோக்கத்தகும். நெடுங்கணக்கினுள் ககரமெய்க்குமுன் ஒட்டிநிற்பதும் காணத்தகும்.

மேற்கூறியவாற்றால், தொல்காப்பியர்காலம்வரை ஆய்த வெழுத்து யகரமாகத்திரிதல் பெருவழக்காயிருந்ததென்று அறியக்கிடக்கிறது.

திரு. நாராயணையங்கார்,
பத்திராசிரியர்.

ஸ்ரீ:

மஹாமஹோபாத்தியாய சாமிநாதையரவர்கள்

T. K. இராமாநுஜையங்கார், உதவிப்பத்திராசிரியர்.

ஐயரவர்களையறியாத தமிழ்மக்கள் இரார். அவர்களுடைய கல்வி கேள்விகளின்பெருமையும், ஒழுக்கமேம்பாடும், பரோபகாரசீலமும் நூலாராய்ச்சித்திறனும் விழுமிய தமிழ்த்தொண்டும் உலகறிந்தவை. அவர்கள் 1855-ஆம் ஆண்டு தோன்றினார்கள். அவர்கள் பிறப்பாற் சிறப்பெய்தியது சோழவளநாட்டு உத்தமதானபுரமாகும். 1942-ஆம் ஆண்டு திருக்கழுக்குன்றில் அவர்கள் நம்மைப்பிரிந்து இறைவனடிநிழலெய்தினார்கள். அவர்கள் நம்மிடை வாழ்ந்தகாலம் 87 ஆண்டுகளாகும். அவர்கள் தமிழ்நூற் பணியில் ஈடுபட்டது 1878-ல் என்ப. எனவே அவர்கள் தமிழ்நூற்பணிகள் புரிந்தகாலம் 64 ஆண்டுகளாகும். இக்காலத்து அவர்களாற் செவ்வியமுறையிற் கற்பார்க்குப் பயன்படும் தெளிவான பலவகை ஆராய்ச்சிக்குறிப்புக்கள் குறிப்புரை முதலியவற்றுடன் வெளியிடப்பெற்ற பழந்தமிழ்நூல்கள் 75க்கு மேலும் உள. இவற்றுள் சங்கத்தொகைநூல்கள் 6. பாரகாவியங்கள் 4. புராணங்கள் 12. இலக்கணநூல்கள் 4. சரித்திரம் 4. பிரபந்தத்திரட்டு 3. கோவை 5. தூது 5. உலா 8. பரணி 2. அந்தாதி முதலிய பிறபிரபந்தங்கள் 22. அவர்களால் முதன்முதல் வெளியிடப்பெற்ற தமிழ்நூல் வேணுவன லிங்க விலாசச்சிறப்பு என்பது. இறுதியில் வெளியிடப்பெற்றது திருக்குற்றாலச்சிலேடைவெண்பா. இவற்றுள் திருவாரூருலா முதலிய 9 பிரபந்தங்கள் இம் மதுரைத்தமிழ்ச்சங்கத்துச் செந்தமிழ்ப்பிரசுரமாக வெளியிடப்பெற்றவை. தென்றல்விடுதூதுமுதலிய 13 பிரபந்தங்கள் சென்னையிலிருந்து மாதந்தோறும் வெளிவரும் கலைமகள் என்னும் சிறந்த தமிழ்ப்பத்திரிகையில் அநுபந்தமாக வெளியிடப்பெற்றவை. இவையேயன்றி ஐயரவர்கள் தாமே உரைநடையாக எழுதிவெளியிட்டநூல்களும் 12-க்கு மேல் உண்டு. அன்றியும் பல பழந்தமிழ்ப்பெருநூல்கள் இருமுறை மும்முறை அவர்களாற் பதிக்கப்பட்டுள்ளன. அவற்றையெல்லாம் கூட்டிநோக்கின் ஐயரவர்களுடைய நூற்பதிப்பு நூறுக்கும் மேற்படும்.

நூற்பதிப்பு யாவரும் மகிழ்ந்து மேற்கொள்ளக்கூடியசெயலன்று. மரபுவழிவந்த இலக்கிய இலக்கண நூற்றேர்ச்சியும், நுணங்கியகேள்வியும், பலசமய நூலுணர்ச்சியும், பலகலைத்துறைகளிலும் பயிற்சியும், தெளிவும்,

நுண்மாண் நுழைபுலமும், இடையறாமுயற்சியும், ஊக்கமும் நினைவுவலியும் தொகுபொருளும் தகுதுணையும் மிகவுடையாரே மேற்கொள்ளத்தக்கதொன்றாம். மேலும், பழந்தமிழ்ச்செய்யுளுருவத்தைத் தாம் தாம் விரும்பியவாறு சிதையாமல் ஏட்டுச்சுவடிகளில் உள்ளபடிகாக்கும் குறிக்கோளும், நூல் நுவல்பொருள்களை யாவரும் உணர விரிக்கும் மனப்பாங்கும் நூற்பதிப்பாளர்க்கு இன்றியமையாதனவாகும். இவையெல்லாம் ஐயரவர்கள்பால் ஒருங்கமைந்து சிறந்தமை அவர்கள் நூற்பதிப்புக்களை உற்றுநோக்குவோர் நன்கு அறிவர்.

ஐயரவர்கள் பதித்த நூல்களோ பலபல சமயத்தொடர்பொடு முத்தமிழ்க்கும் உரிய வெவ்வேறு கலைத்துறைபற்றிப் பண்டைமரபுநெறிவந்தனவாகும். அவர்கள் நூற்பணிசெய்யத்தொடங்கிய காலமோ முத்தமிழுள் இசைநாடகநூல்கள் இறந்தொழிய, இயற்றமிழ் கற்பாரும் கற்பிப்பாரும் அருகித் தமிழ்நாட்டார் பிறமொழிமோகந்தலைக்கொண்டு தமிழை அநாதரித்திருந்தகாலமாகும். சில பிற்கால இலக்கியங்களன்றிப் பழந்தமிழ்த்தொகைநூல்களும் இலக்கணங்களும் பெருங்காவியங்களும் பயில்வாரும் நுவல்வாரும் இன்றிப் பெயரளவாற்கேட்கப்பட்டுச் சிதலுக்கு இரையாகநின்ற அக்காலத்து அவை அவ்வாறு அழிந்துபடாமல் ஊரூராகச்சென்று அவ்வேடுகளைத் தேடியெடுத்து 64 ஆண்டுகளாக அவற்றை ஆராய்ந்து செப்பஞ்செய்து கற்பார்மலைவுறாதுகற்கும்வண்ணம் பலவகை ஆராய்ச்சிக்குறிப்புக்களுடன் புத்தகவுருவில் வழங்கிய வண்மைப்பெருமை ஐயரவர்களுக்கே தனிச்சிறப்பாய் அமைந்தது.

பழந்தமிழ்ச்சங்கநூற்பதிப்பால்விளங்கிய ஐயரவர்கள்காலத்தைச் சங்ககாலமென்றே சொல்லலாம்.

"பாவாழ்ந்த சங்கத்தார் பலருநவும் ஒருநுவாய்
நீவாழ்ந்தாய் நின்காலம் நெடுஞ்சங்க காலமென"

என்று ஒரு தமிழ்ப்பெரியார் பாடலும் உண்டு.

சங்கத்தொகைநூல்களுள் ஒவ்வொன்றிலும், அவற்றை இயற்றினோர்—இயற்றுவித்தோர், தொகுத்தோர்—தொகுப்பித்தோர் பெயர் முதலியவிவரம் மட்டும் இதுவரை குறிக்கப்பட்டுள்ளன. எனினும், இனிவரும் சரித்திராசிரியர்களால் அவற்றுடன் அந்நூல்களிற் பெரும்பாலனவற்றின் பதிப்பாசிரியர் பெயர்வரிசையில் ஐயரவர்கள்பெயரும் பதிப்பித்தோர்பெயர்வரிசையில் இம்மதுரைத்தமிழ்ச்சங்கஸ்தாபகரான பாண்டித்துரைத்தேவர் முதலியோர் பெயர்களும் போற்றிக் குறிக்கப்பெறும்.

ஐயரவர்களுடைய நூற்பதிப்புக்கள் நன்கு நடைபெறும்படி பொருளுதவிபுரிந்தவர்களுள், இம்மதுரைத்தமிழ்ச்சங்க ஸ்தாபகரான பாண்டித்துரைத்தேவரவர்களும், அவர்களுக்குப்பின் இச்சங்கத்தின் தலைவராயிருந்த சேதுவேந்தர் திரு. பா. இராஜராஜேசுவரமுத்துராமலிங்கஸேதுபதிமஹாராஜரவர்களும், இம்மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் துணைத்தலைவர் திரு. T. C. ஸ்ரீநிவாஸையங்காரவர்களும், திருவாவடுதுறையாதீனகர்த்தர் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணியதேசிகரவர்களும், திருப்பனந்தாள் காசிமடத்துத்தலைவர் ஸ்ரீ சாமிநாதசுவாமிகளும் முன்பு குறிக்கத்தக்கவராவர்.

இவருள் சங்கஸ்தாபகராகிய பாண்டித்துரைத்தேவர்பொருளுதவியான் மணிமேகலையும் புறப்பொருள்வெண்பாமாலையும் முதன்முறை பதிக்கப்பெற்றன. சங்கத்தலைவராகிய திரு. பா. இராஜராஜேசுவர முத்துராமலிங்க ஸேதுபதிமஹாராஜரவர்கள் (உத்தேசம் 1917-ஆம் ஆண்டுமுதல் தம் வாழ்நாள் முழுதும்) ஐயரவர்களுக்கு நூலாராய்ச்சியில் உதவிபுரிந்தார்க்கு மாதந்தோறும் பொருளுதவிபுரிந்துவந்துள்ளார்கள். இப்போது மதுரைத்தமிழ்ச்சங்கத்தலைவராயிருந்து அதனை நன்குபுரந்துவரும் சேதுவேந்தரான ஸ்ரீமது ஹிரண்யகர்ப்பயாஜிரவிகுலமுத்துவிஜயரகுநாதராஜா மஹாராஜராஜஸ்ரீ ரா. ஷண்முகராஜேசுவர நாகநாதஸேதுபதிமன்னரவர்களும் அவ்வப்போது வேண்டிய உதவிபுரிந்துள்ளார்கள். சங்கத்துணைத்தலைவர் திரு. T. C. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள் அரிதின்முயன்று பலருதவியும்பெற்று ரூபா ஐயாயிரம் சங்கத்தின் 24-ஆம் வருடவிழாவில் ஐயரவர்களுக்குப் பொற்கிழியாக வழங்குவித்தார்கள். [இவற்றால் ஐயரவர்களுக்கும் இம்மதுரைத்தமிழ்ச்சங்கத்துக்கும் உள்ள தொடர்பு புலனாகும்.] ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணியதேசிகரவர்கள் ஐங்குறுநூறும் பதிற்றுப்பத்தும் இரண்டாமுறை பதிக்கப் பொருள் வழங்கினார்கள். திருப்பனந்தாள் காசிமடத்துத்தலைவர் ஸ்ரீ. சாமிநாதசுவாமிகள் குமரகுருபரர் பிரபந்தத்திரட்டு முதற்பதிப்புக்குப் பொருளுதவிபுரிந்தார்கள். இவையெல்லாம் தம் நூற்பதிப்பில் ஐயரவர்கள் எழுதிய முகவுரைகளால் விளங்கும்.

ஐயரவர்கள் பழந்தமிழ்நூல்களின் பதிப்பாசிரியராகமட்டும் நிலவவில்லை. பல்லாயிரம்மாணவரைத்தமிழ்பயிற்றிச் சிறந்த போதகாசிரியராகவும் தாமே பலநூல்களையியற்றி நூலாசிரியராகவும் பலநூல்களுக்குக் குறிப்புரைவரைந்து உரையாசிரியராகவும் விளங்கினார்கள்.

"மணிமேகலைநூனுட்பங்கொள்வதெங்ஙன் !" என்று பழம்புலவர் ஒருவர் சிலேடைவாய்பாட்டான் வியந்துகூறியதுண்டு. மணிமேகலைக்கு ஐயரவர்கள் எழுதிய குறிப்புரை அந்நூனுட்பங்களையெல்லாம் இனிதுவிளக்குந்தன்மை அதுகற்றார்பலரும் நன்கறிந்தது. பழையவுரையின்றியொழிந்த

குறுந்தொகைநூலுக்கு அதன் ஆழ்பொருள் பலவும் விளங்கப் புதிய விரிவுரை வரைந்து வழங்கிய பெருமையும், "சிந்தாமணி..........எழுதிக்கொளினும் நந்தாவுரையை யெழுதலெவ்வாறு?" என்று அமையாமல் அவ்வுரையை எழுதா எழுத்திற் பதித்துதவியபெருமையும் ஐயரவர்களுக்குரியதே.

மேலும், அவர்கள், தம் ஆசிரியர் ஸ்ரீ மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்கள், தியாகராயசெட்டியார், கோபாலகிருஷ்ணபாரதியார் முதலியோருடைய சரித்திரங்களை வசனமாக எழுதிவெளியிட்டுச் சிறந்த வரலாற்றாசிரியராகவும் விளங்கினார்கள். இவர்கள் வசனநடை தனித்தலைமைவாய்ந்தது. அன்றியும் அவர்கள் தம் காலத்தவர்களும் தமக்குமுற்பட்டவர்களுமான புலவர், அரசர், பிரபுக்கள், பெரியோர், அதிகாரிகள், ஆலய்நிர்வாகிகள், மடாதிபதிகள், வள்ளல்கள் முதலியோரைப்பற்றித் தாமே நேரில் அறிந்தனவும் பிறர் சொல்லக் கேட்டனவுமாகத் தொகுத்துவைத்திருந்த வரலாற்றுக் குறிப்புக்களையெல்லாம் விரித்தெழுதியிருப்பின் அது குறைந்தஅளவு தமிழ்நாட்டின் ஒருநூற்றாண்டுச்சரித்திரமாக விளங்கியிருக்கும். அது நிறைவேறுமுன் அவர்கள் காலஞ்சென்றது தமிழ்நாட்டின் தவக்குறையென்றே சொல்லத் தகும்.

ஐயரவர்கள் பூதவுடல்நீத்து இரண்டாண்டுகள் ஆயினவெனினும் அவர்கள் தாம் தந்த நூல்கள் உள்ளவரை புகழுடம்போடு நம்மிடையே நிலவி நிற்பார்கள் என்பது ஒருதலை.

தமிழர்கலைச்செல்வங்களைப் பாதுகாத்துச் செப்பஞ்செய்து வழங்கிய அவர்கள்திறத்துத் தமிழ்நாட்டார் நன்றிபாராட்டிச் செய்யத்தகுங்கடமைகளைக் காலம் தாழ்க்காது பொருந்துமாற்றான் விரைந்துசெய்யமுன்வருவார்களென்று நம்புகிறோம்.

பழந்தமிழ்நூற்கோயிற்றிருப்பணியிலீடுபட்டு அதற்கே தம் வாழ்நாளையெல்லாம்வழங்கிய ஐயரவர்களுக்கு அத்திருப்பணியே மகிழ்வூட்டுவதாகும். ஆதலின் அவர்கள்பால் தமிழ்நாட்டார் நன்றிபாராட்டிச்செய்யும் கடமைகளுள், அவர்கள் பதித்த நூல்களை அவர்கள்பதித்தமுறையிற் சிறிதும் பிழையாது பதித்து யாவரும் எளிதிற்பெற்றுப் படிக்குமாறு வழங்குவதும் ஒன்றாகக்கொள்ளல்தகும்.

சங்கத் தமிழ்நூல்கள் சாலப் பதித்துதவி
எங்கள் இதயத் திருள்கடிந்து—தங்குதலால்
ஓராழி யான்போல் உலகுதொழ வாழிபெரும்
பேரா சிரியர் பிரான்

உ

தென்னாட்டில் ஊற்றெடுத்த அன்புப்பெருக்கு வடநாட்டிற்பரவிய வரன்முறை

[சுவாமி விபுலாநந்தரவர்கள், இலங்கைப்பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத்தலைவர்]

௪௬-ஆம் பக்கத் தொடர்ச்சி

கபீர்தாஸர் காலம் கி. பி. 1398 — 1518 ஆகும். இவர் அதிசயிக்கத்தக்கவிதமாக இராமாநந்தருக்குச் சீடரானாரென அறிகின்றோம். நெசவுக்காரச்சாதியிலுதித்த ஏழை இஸ்லாமியச் சிறுவராகிய தம்மைப் பிராமணமுனிவர் சீடராக்க விரும்பாரெனவெண்ணிய கபீர், இராமாநந்தர் வழக்கமாக ஸ்நானம்செய்யச் செல்லுகின்ற படித்துறையிலே போய்ப் படுத்திருந்தார். சூரியோதயத்திற்குமுன்னே படித்துறைக்குச்சென்ற இராமாநந்தர் தமக்குப் பின்னாளிலே சீடராகும் பான்மையினராகிய கபீருடைய உடலிலே திருவடியை வைத்தார். இருளாக இருந்தமையினாலே என்ன நிகழ்ந்ததென அறியாது பரபரப்புற்றுத் தமது இஷ்டதெய்வமாகிய ஸ்ரீராமனுடைய திருநாமத்தை இருமுறை உச்சரித்தார். தமது திருவடி தீண்டப்பெற்றோர் யாவரென்பதை இராமாநந்தர் அறிந்துகொள்ளுவதற்குமுன்னமே கபீர், "ராமா, ராமா" என்று உச்சரித்துக்கொண்டு அவ்விடத்தைவிட்டு ஓடிவிட்டார். இது நிகழ்ந்தபொழுது கபீருக்கு வயது பதின்மூன்று. படித்துறையை நீங்கிய கபீர் இராமாநந்தர் தம்மைச் சீடராக ஏற்றுக்கொண்டாரென்று ஊரெங்குஞ் சொல்லித்திரிந்தார். இராமாநந்தர் கபீரை அழைப்பித்து வினவுதலும், இராமாநந்தருடைய திருவடிகளின் பரிசமும், அவர் வாயினின்று பரிசுத்தம் பொருந்திய இராமநாமத்தினைப் பெற்றுக்கொண்டதும், தமக்குச் சிஷ்யத்துவத்தை அளித்தனவெனக் கபீர் விடைபகர்ந்தார். இதனைக் கேட்ட இராமாநந்தர் கபீரை இறுகத்தழுவி ஆசிர்வதித்தார். அதன்பின் கபீர் அப்பெரியாரின் போதனைகளை ஒழுங்காகக் கேட்டுவந்தார். ஆத்மஞானத்தையடைந்த கபீர் நாடெங்கும் சென்று இஸ்லாமியமதத்திற்கும், இந்துமதத்திற்கும் இடையேயுள்ள சமரசத்தினைப் போதிப்பாராயினார். அவருடைய பாடல்களும் உபதேசங்களும் ஆண்டவன்பால் உள்ளபடி வேட்கையுடைய மக்களுக்குப் பொதுச்

சொத்து ஆயின. இந்துக்களுடையதெய்வம் காசியிலும் இஸ்லாமியருடையதெய்வம் மக்கத்திலும் இருக்க, அனைவர்க்கும் பொதுவாகியதெய்வம் எல்லா உயிர்களின் இதயத்திலுமிருக்கிறதெனக் கபீர் கூறினர். இந்த அற்புதவாசகம் கபீர்தாஸருடையபோதனைகளின் மூலவாசகம் ஆயிற்று.

*　　　*　　　*

இராமாநந்தருடைய சக்கிலியசாதிச்சீடராகிய இரவிதாஸரானவர், கி. பி. 1575 முதல் 1624 வரையும் வாழ்ந்த யாக்கோபு போஹேமே என்னும் மேனாட்டுச் சக்கிலிய ஞானவானை நிகர்த்தவர். அந்த ஜெர்மனிய ஞானவான் உவில்லியம் பிளேக் என்னும் ஆங்கில ஞானவானுக்கு உண்மைவழியைக் காட்டியவர். மீராபாயென்னும் இராணி இரவிதாஸருடைய சிஷ்யை என அறிகின்றோம். இவ்வம்மையாரியற்றிய அழகிய தோத்திரப்பாடல்கள் இந்நாளிலும் வழங்குவன. தெய்வீகஅன்பின் உருக்கத்தினை அறிந்தோர்மாத்திரமே ஆண்டவனை அடைதற்குரியர் என்னும் உண்மையும், மன்பதைக்குத் தொண்டுசெய்வதே சமயவாழ்க்கையின் உச்சநிலையென்பதும், இரவிதாஸர் கைக்கொண்ட கொள்கைகளாம். கி. பி. 1544 முதல் 1608 வரையும் இராஜபுத்தானநாட்டிலே வாழ்ந்த தாதூ் என்னும் பெரியார் கபீர் உணர்த்திய உண்மைகளைக் கைக்கொண்டு ஒழுகியவர். அவர் இந்துக்களையும் இஸ்லாமியர்களையும் தமது சீடராகக்கொண்டார். ஹிந்திமொழியிலே இராமாயணத்தை எழுதிய ஆசிரியராகிய துளசிதாஸர் 16-ஆம் நூற்றாண்டிலே வாழ்ந்தார். இவர் இராமாநந்தருடைய ஆத்மீகவாழ்க்கையைப் பின்பற்றியவர். சத்தியமும் அன்பும், அறநெறியும், பிதுர்வாக்கிய பரிபாலனமும், நல்லொழுக்கமும் ஒருருவெடுத்தாலனைய சிறப்புவாய்ந்த ஸ்ரீராமசந்திரர் துளசிதாஸருடைய கதாநாயகனும், இஷ்டதெய்வமுமாக அமைந்திருந்தார். அக்பர் சக்கரவர்த்தியினுடைய சமுகத்திலே துளசிதாஸர் சிறப்பு எய்தினர். ஞானக்கவிஞராகிய சூர்தாஸரும் இக்காலத்திலே வாழ்ந்தார். பக்திபரவசராக இவர் எழுதிய பாடல்கள், ஸ்ரீகிருஷ்ணபகவானைப் பாட்டுடைத்தலைவனாகக்கொண்டன. பிருந்தாவனத்திலே ஆடல்புரிந்த தெய்வீகக் கோபாலனிடத்துண்வத்த அன்பின்பெருக்கினை அடிப்படையாகக் கொண்டு வல்லபாசாரியர் ஒரு புதிய சம்பிரதாயத்தினை ஏற்படுத்தினர். இவர் ஒரு தெலுங்கப்பிராமணர். இவர் பிறந்த ஆண்டு கி. பி.

1479 என்பர். கி. பி. 1485 முதல் 1533 வரையும் வாழ்ந்த ஸ்ரீசைதந்நியதேவர் வங்காளநாட்டின் சமயவாழ்க்கையிலே பெரிய மாறுதலை உண்டாக்கினர். இவர் கயாக்ஷேத்திரத்திலே ஈசுவரமுனி என்னும் வைஷ்ணவப்பெரியார்பாற்சென்று தீக்ஷைபெற்றுப் பக்தி மார்க்கநெறிநின்றார். இவர் தென்னாட்டுக்கு யாத்திரைசெய்து, ஸ்ரீராமாநுஜருடைய சிஷ்யபரம்பரையினர்களோடு அளவளாவினர். ஆண்டவனுடைய திருநாமங்களை ஒன்றுகூடிப் பாடுகின்ற சங்கீர்த்தனமுறையினை இப்பெரியார் வங்காளநாட்டிலே நிறுவினர். உயிர்க்கு உறுதிபயக்கும் பக்தியாகிய தீர்த்தத்தினை ஆண்டவனை அவாவிநின்ற மக்கள் பலருக்கு இவர் வழங்கினர். பிருந்தாவனத்துத் தெய்வீகக்கோபாலனுடைய பிரியையாகிய ஸ்ரீராதாபிராட்டியாரின் அவதாரமென ஸ்ரீசைதந்நியதேவர் தம்மை மதித்திருந்தார்.

* * *

மத்தியகால இந்தியாவிலே மகாராஷ்டிரத்தினை அலங்கரித்த பெரியோர்களுடைய வாழ்க்கைவரலாற்றினை ஒருசிறிது உணர்ந்துகொள்ளும்பொருட்டு இந்தியாவின் மேற்றிசையை நோக்குவோமாக. சந்நியாச ஆச்சிரமத்தைவிட்டு இல்வாழ்க்கையினுட்புகுந்த விட்டலபண்டிதரின் புதல்வராகிய நிவிர்த்திநாதரானவர், ஹாகினிநாதருடைய சீடராகப் பதின்மூன்றும்நூற்றாண்டின் பிற்பகுதியிலே வாழ்ந்தார். அங்ஙனமாதலின் அக்காலத்து மகாராஷ்டிரநாட்டின் ஆத்மீகவாழ்க்கை நாதசம்பிரதாயத்தோடு தொடர்புடையதெனக் காணுகின்றோம். நிவிர்த்திநாதர் தமது சகோதரராகிய ஞானதேவருக்குக் குருவாகினர். ஞானதேவர் மிகக் கீர்த்திவாய்ந்த ஞானநூல் ஆசிரியராவார். துன்னகாரர் வீட்டிலே பிறந்த நாமதேவர் என்னும் பெரியார் ஞானதேவரோடு ஒத்தகாலத்தினர். மகாராஷ்டிரதேசத்துப் பெரியார்களுடைய பக்தியானது, பண்டரிபுரக்ஷேத்திரத்திலே எழுந்தருளியிருக்கும் விட்டலபாண்டுரங்கர் என்னும் திருநாமத்தினையுடைய பகவான் பாற்சென்றது. மாரததேசத்தின் வைஷ்ணவசமயமானது பிராமணர் முதலிய உயர்குலத்தாரிடையும் செறிந்திருந்ததெனினும், அது தாழ்ந்த குலத்தாரிடையேதான் மிகவும் பெருக்கமாகப்

பரவியிருந்தது. நாமதேவர், துக்காராமரைப்போல் ஞானக்கண்ணுடையோராய் உண்மைச் சமயவுணர்ச்சியுடையோராய் வாழ்ந்த நான்காம் குலத்தவரே அந்நாட்டிலே அக்காலத்திலே ஞானுசிரியராக விளங்கினுரென்றும் அன்னுர் ஸம்ஸ்கிருதம் கற்றுவல்ல பண்டிதரல்லர் என்றும் அறிகின்ருேம். இவ்விஷயத்தில் மாரத நாட்டு வைஷ்ணவசமயம், இராமாநந்தருடைய சிஷ்யரின் சமய நெறிபோல்வது என ஸர். ஆர். ஜி. பண்டார்க்கர் கூறுகிருர். கி. பி. 1607 முதல் 1649 வரையும் வாழ்ந்த துக்காராமர் என்னும் ஞானக் கவிஞருடைய பாடல்கள் இந்நாளிலும் வழக்கிலிருக்கின்றன. இப்பெரியார் மாரதமன்னனுகிய சிவாஜியின்காலத்தவர். தம்மிடத்துச் சீடனுக வாவிரும்பிய சிவாஜியாசனை இராமதாஸரிடத்து அனுப்பியவர். இராமதாஸர் சிவாஜிக்குக் குருவாகிய காரணத்தினுலே அரசியல்விஷயத்திலும் தொடர்புடையவராகவிருக்கநேர்ந்தது. ஆத்மீகசேவைக்கும் வாழ்க்கைநலத்திற்கும் தொண்டுபுரியும் மடாலயங்கள் பலவற்றை இராமதாஸர் நாட்டின் பலவிடங்களிலும் நிறுவினுர். அவருடைய இதயம் ஆண்டவன்பால் மாருது நிலைத்திருந்தது. "மாணத்துக்கு அஞ்சாத மாரதர்களை ஒன்றுகூட்டி மராட்டியருடைய தர்மத்தை வளர்க்கவேண்டும்" என இராமதாஸர் தம்மிடம் வந்தோருக்கு உபதேசித்தார்.

சீக்கியருடைய சமயநூலாகிய, கிரந்தசாஹிப் கி. பி. 1604-ஆம் ஆண்டிலே முதன்முதலில் வகுக்கப்பட்டதென்பர். மேலே நாம் குறித்த பெரியார்கள் சிலருடைய பாடல்களும் வாய்மொழிகளும், இந்நூலிடையே காணப்படுகின்றன. சீக்கிய குருபீடத்தின் ஐந்தாங் குரவாகிய அருச்சுனதேவரால் இந்நூல் வகுக்கப்பட்டது. சீக்கிய மதஸ்தாபனஞ்செய்த முதற்குரவாகிய குருநானுக் லாகூர்நகரத்திற்கு அணித்தாகிய தல்வந்தி என்னும் இடத்திலே 1469-ஆம் ஆண்டு அவதரித்தார். மேற்றிசைநோக்கி மக்கமாநகாம் பக்தாத் நகரம்வரையும், தெற்குநோக்கி இலங்கைத்தீவுவரையும் இவர் யாத்திரைசெய்தார். இந்துக்களும் முஸ்லீம்களும் ஒரேதன்மையாக இவர்மீது அன்புபாராட்டினுர்கள். இடைக்கால இந்தியாவின் சமயவளர்ச்சிவாலாற்றிலே சீக்கியமதத்தின் பூர்வவான்முறை ஒரு சிறந்தபாகமாகும். சீக்கிய குரவர்கள் ஞானவான்களாக

இருந்ததோடு காரியநிருவாகத்திலும் ஆற்றல்வாய்ந்தவர்களாய் இருந்தார்கள். அவர்கள் சாதித்தடைகளைத் தகர்த்தெறிந்து தமது சீடரிடையே அநுஷ்டானத்திற் சமத்துவமுண்டாக்கி அதன் பொருட்டுப் பொதுவாகிய அட்டிற்சாலைகளை அமைத்தும், ஏழைகளையும் ஒடுக்கப்பட்டோரையும் பாதுகாத்தலாகிய சமூகத் தொண்டினைச் செய்தும் வந்தார்கள். இவ்வளவோடமையாது தங்களுடைய சீடர்களுக்குப் படைக்கலப்பயிற்சியும் அளித்தார்கள். சீக்கிய குரவர்களுடைய வருகையினாலே நாட்டிலே ஒரு புத்துணர்ச்சி யேற்பட்டது. இடைக்கால இந்தியாவிலிருந்த பெரியோர்கள் இந்துமுஸ்லீம் ஒற்றுமையை அநுஷ்டானத்திற்குக் கொண்டுவந்தார்கள். இத்தொடர்பிலே அக்பர்சக்கரவர்த்தியின் குமாரராகப்பிறந்து பெரிய ஞானவானுகிய தாராஷிக்கோ என்னும் இளவரசர், இந்துமுஸ்லீம் சீடர்களையுடையவராயிருந்த பிராணநாதர், இந்துக்களாலும் முஸ்லீம்களாலும் உரிமை பாராட்டப்படுகிற நாகூர்மீரான் என்னும் பெரியோர்கள் முக்கியமாகக் குறிக்கப்படத்தக்கவர்கள். இவர்களெல்லாம் 18-ஆம் நூற்றுண்டின் முற்பகுதியிலே வாழ்ந்தவர்கள்.

* * *

யாம் இங்குச் சுருக்கமாக ஆராய்ந்த இடைக்கால இந்திய சமவளர்ச்சியானது சிறந்த ஆற்றல்வாய்ந்திருந்தது. தேசத்தின் சமூகவாழ்க்கையிலே ஒருவித இடையீடுமின்றிப் புதிய மதங்களும் புதிய வகுப்பினராகிய மக்களும் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். இந்துமதத்தின் தொன்றுதொட்டுவந்த வருணங்களுக்குப் புறம்பே உள்ளோரும், இந்துதருமத்திற்கு உரியோராயினமையின் அவ்வறநெறியானது புதிய ஆற்றலைப் பெற்றது. பக்திப்பிரவாகமானது நாடெங்கும் பரவித் தனக்கென வாழுங் குணத்தினையகற்றிச் சமூகவாழ்க்கையிலே புதிய நம்பிக்கையும் சிரத்தையும் உண்டாகச்செய்து தேசிய உணர்ச்சிக்கு வலிமைதந்தது: இமயம்முதற் கன்னியாகுமரிவரையும் நாடெங்கும் மக்களுடைய வாழ்க்கையிலே ஒரு புதிய எழுச்சி காணப்பட்டது. வடபாலிலுள்ள ஆரிய நாகரிகம் தென்பாலிலுள்ள இந்திய நாகரிகத்தோடு ஒன்றுகூடியமையினாலே பாரத நாகரிகம் தனிப்பெருந்தலைமை

பெற்றுநின்றது. மகாராஷ்டிரமன்னருடைய வலிமையும் சீக்கியருடைய படைத்தொழில் அமைப்புக்களும், இராமாநுஜருடைய விசிஷ்டாத்வைதபோதனையினாலே தோன்றி நிலைபெற்றன. சங்கராசாரியருடைய அத்வைதபோதனையினாலே ரஜபுத்திருடைய வீரம் நிலைபேறெய்தியதும் இத்தொடர்பிலே அறிதற்பாலது. ஒவ்வொரு பெரிய இயக்கமும் சிறந்த பயனை அளித்தபின்னர், வலியிழந்து புதிய ஊற்றுக்களை நாடிநிற்றல் இயல்பு. அன்புமார்க்கமானது இடைவிடாது மனிதனுடைய சிறுமையினை எடுத்துக்காட்டுதலினாலே, மனிதருடைய சிந்தையிலே சிரத்தை குன்றச் சமூகவாழ்க்கையிலும் வலிமை குறையும். மேனாட்டிலிருந்து இந்நாட்டிற்குவந்த புதிய விஞ்ஞானசாஸ்திரமானது ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும், கிறிஸ்துமதத்தினைக் கலக்கியது. கிறிஸ்துசமயத்தைப்போலவே வைஷ்ணவசமயமும் மதஸ்தாபகர்களாகிய பெரியோர்களை அவாவிநிற்கின்ற அன்புநெறியாகும். விஞ்ஞானநூலின் தாக்கலைத் தடுத்துநிற்கும் பொருட்டு இந்துசமயமானது அறிவுத்துறையைச் சிறப்புறவற்புறுத்துதல்வேண்டும். அங்ஙனமாயினும் இடைக்கால இந்தியாவில் வாழ்ந்த பெரியோர் திரட்டிவைத்த ஆத்மீகசெல்வத்தினை இந்நாட்டினர் இழந்துவிடுதல் கூடாது. பழமையும் புதுமையும், துவைதமும் 'அத்வைதமும், பௌதிக விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானக்காட்சியும், மேற்றிசையறிவும் கீழ்த்திசைச்சமயமும், மனமொடுங்கிய தியானநிலையும் மன்பதைக்குப் தொண்டுபுரிதலும், சமரசப்படவேண்டியகாலம் இது. ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸரின் வருகையினாலே மேற்கூறிய சமரசநிலை கைகூடியிருக்கிறது. அவருடைய முதற்சீடராகிய சுவாமி விவேகானந்தர், பிரசங்கங்களினாலும் நூல்களினாலும் தெளிவுறக்காட்டிய வழியினை இந்நாடு கடைப்பிடித்து ஒழுகுமாயின், தானும் விடுதலைபெற்றுப் பிறநாட்டினருக்கும் ஞானஒளியைத்தரும்.

கம்பராமாயணசாரம்

உத்தரகாண்டம்

[ராவ்ஸாஹிப். ஸ்ரீ. வே. ப. சுப்பிரமணியமுதலியாரவர்கள் G.B.V.C.]

௫௬-ஆம் பக்கத் தொடர்ச்சி

முனிவர்கள் இலவணன் சரிதமுரைத்தல்

மறுநாள் தன்னைக் காணவந்த முனிவர்களை இராமன் வரவேற்றுப் பூசித்து "உங்கள் தவத்துக்கு இடையூறில்லையே?" என்று சேமவிசாரணைசெய்தான். அவர்கள், "மதுவென்னும் அசுரவேந்தன் சிவனிடம் திரிசூலம்பெற்றவன். அவன் தனக்கு மனைவியும் இராவணனுக்குச் சிறியதாயுமான கும்பினசிவயிற்றிற் பிறந்த கொடியமகன் இலவணனென்பவனுக்கு 'இது உன்கையிலிருக்கும் போது உன்னைத் தேவர் முதலிய யாவரெதிர்த்தாலும் இறப்பார்கள்' என்று அந்தச் சூலத்தைக் கொடுத்தான். அந்த இலவணன் உலகமுழுவதையும் அழித்து எங்களைத் தவஞ்செய்யவிடாது தடுக்கின்றான். எங்களுக்கு இடையூறுநேர்ந்தால், இந்த நகரன்றிப் புகலிடமுண்டோ?" என்றார்கள். இராமன் 'அந்தத் தீயோனைக் கொல்வேன். நீங்கள் உங்களிடங்களுக்குப்போங்கள்' என்றுகூறி அவர்களுக்கு விடைகொடுத்தனுப்பினான்.

பின்பு, இராமன் தம்பியரைத்தருவித்து 'உயிர்க்கொலை செய்வோனும் முனிவர்களைத் துன்புறுத்துபவனுமான இலவணனை யார் கொல்வார்?' என, இலக்குமணன், 'அவனை நான் கொல்வேன்' எனப் பரதன், 'உன்னுடன் பதினான்குவருடம் காட்டில்வாழ்ந்து கண்ணுறங்காமல் காத்து இலங்கைப்போரில் இந்திரசித்து முதலியோரைக் கொன்று இலக்குமணன் இளைத்திருக்கிறான். என்னை ஏவுக. இலவணனை நான் கொல்வேன்' எனச் சத்துருக்கன், 'நீ அரசாளமறுத்ததனால், உன் பாதுகையைத் தலைமிசைவைத்து மரவுரியுடுத்துச் சடைமுடிதரித்து உன் வனவாழ்வைநினைந்து,

இடையறுதொழுகுங் கண்ணீரினனாய் அயோத்திநகரில் வாழாது நந்திக்கிராமத்தில் வாழ்வானாகி விரதத்தால் இளைத்த பரதனை அந்த அரக்கன்மேல் ஏவாமல் என்னை ஏவுக. இனிமேலாக அவன் தவத்தைத்தடுப்பதால் முனிவர் துன்புறாமல் அவனை விண்ணுலகி லேற்றிவிடுவேன்' என்றான்.

இலவணனைக் கொல்லும்படி இராமன் சத்துருக்கனை ஏவல்

இராமன், 'மூன்றுலகத்திலும் உன்னை எதிர்க்கவல்லாரில்லை. இலவணனை எமலோகத்திலேற்றி, முனிவர்கள் துன்பத்தை மாற்று வாயாக' என்று சத்துருக்கனுக்குக் கட்டளையிட, அவன் மகிழ்ந்து, இராமனை மூன்றுமுறை வலஞ்செய்து வணங்கினான். அவனை இராமன் தழுவி, அளவற்ற சதுரங்கசேனைகளும் ஆடையாபரணங் களும் அளித்தான். சத்துருக்கன் பரதனையும் இலக்குமணனையும் வசிட்டனையும் வணங்கி இலவணன்மீது போர்செய்யப்புறப்பட் டான்.

சத்துருக்கன் வான்மீகிவனமடைதல்

வெண்ணிறமுடைய சத்துருக்கன், வெள்ளிமலை பொன்மலை மேலேறினாற்போலச் செம்பொற்றேர்மேலேறிச் சேனைசூழச் சென்று, கங்கைநதியை அடைந்து, நீராடி, அக்கரையிலே வான் மீகிவனத்தைக் கண்டான்.

சீதை இரண்டு ஆண்குழந்தைகளைப் பெறுதல்

அவன், அம்முனிவனைக் கண்டுவணங்கி, அவனால் உபசரிக் கப்பெற்று, அவனுடைய ஆச்சிரமத்திலே தங்கியிருந்த அன்று இரவிலே சீதாதேவி இரண்டுகுழந்தைகளைப்பெற்றாள். முனிவன், அந்தக்குழந்தைகள் இராமனுடைய இலக்கணங்கள் அமைந்திருத் தலைக்கண்டு மகிழ்வுற்றான்.

இராமன்மக்கள் குசலவரெனப் பெயரிடப்பெறுதல்

அவன், அந்தக்குழந்தைகளைப் பூதம் பிசாசு முதலானவைகள் அணுகாதபடி மந்திரம் ஓதிக் குசலவங்களால் (குசம்-தருப்பை. லவம்-பசுவின் வால்மயிர்) துடைத்தான். அதனால், அந்தப்பிள்ளைகள்

குசன் லவன் என்ற பெயர்களுடையவராயினர். சீதைக்குப் பிள்ளைகள் பிறந்தார்களென்று முனிவன் சொல்லக்கேட்ட சத்துருக்கன் மகிழ்ந்தான். மகிழ்ந்தவன், 'மாடங்கள் அடர்ந்த அயோத்தி நகரில் பிறத்தற்பாலரான பிள்ளைகள், மரங்களடர்ந்த வனத்திற் பிறந்தார்கள். அயோத்தியிற் பிறந்திருந்தால், இராமன் பிராமணர்க்குப் பூதானமும் கோதானமும் சொன்னதானமும் செய்திருப்பான். நகர்முழுதும் முரசறையப்பட்டு, நகரமாந்தரெல்லாரும் மங்களமாக எண்ணெய்முழுக்குமுழுகித் திருவிழாக்கொண்டாடியிருப்பார்கள்' என்றெண்ணி வருந்தினன்.

சத்துருக்கன் யமுனைக்கரையிலுள்ள முனிவர்விருந்தினனுதல்

மறுநாள் உதயமானபோது சத்துருக்கன் வான்மீகியை அடிவணங்கி விடைபெற்று வழிச்செல்வானுனன். ஏழுநாள் கழிந்தபோது, யமுனையாற்றைக்கடந்து அக்கரையிலிருந்த முனிவர்களை வணங்கி, அவர்கள் அளித்த விருந்தருந்தியிருந்தபோது, 'இலவணனையும் அவன் சூலத்தையும்பற்றி நீங்களறிந்திருக்கிற விவரங்களைக் கூறுங்கள்' என, அவர்கள் கூறுகின்றார்கள்:—

அந்தமுனிவர்கள், இலவணன் சூலத்தினுல் மாந்தாதாவையும் அவன்சேனையையும் அழித்ததை உரைத்தல்

'உங்கள் மநுகுலவேந்தனுன மாந்தாதா, எல்லா அரசர்களையும் வென்று ஏகசக்காாதிபதியாய்ப் புலியும் புல்வாயும் ஒருதுறையில் நீரருந்தச் செங்கோல்செலுத்திப் பூமிமுழுதும் ஒருகுடைநிழலிலே தங்க அரசாண்டுவந்தான். அவன், இந்திரனை வெல்லக் கருதி விண்ணுலகத்துக்குச்சென்றபோது, இந்திரன், அவன் கருத்தை அறிந்து 'மண்ணுலகத்திலே உன் ஆணைவழியொழுகாத தீயவலியோன்மேற்செல்லாது விண்ணுலகத்தை வெல்லமுயலல் முறையாமோ?' என, மாந்தாதா, 'மண்ணுலகில், என் ஆணைக் கடங்காத தீயோன் யாவன்? அவன் பெயர் யாது? கூறுக' என, இந்திரன், 'மதுவென்னும் அசுரராசன்மகன், மதுபுரியை ஆள்பவன், எல்லாப்பாதகங்களையும் செய்பவன், இலவணனென்பவன், எதிர்ப்பாரெவரும் இல்லாதவனுயிருக்கின்றுன்' என்றுன். இந்திரன்

சொல்லியது காய்ந்த நாராசம்போலக் காதிற் பாய, மனம் பதை பதைக்க, மானத்தால் வருந்தி, மாந்தாதா கருதிவந்த வானுலகப் போரைக் கைவிட்டு, மண்ணுலகுக்குத் திரும்பிவந்து ஒரு தூதுவனைத் தருவித்து, 'நீ மதுபுரிக்குப்போய், இலவணனைக் கண்டு "நீ உயிரோடிருக்கவிரும்பினால், முனிவர்களுக்குத் துன்பஞ்செய்தலையும் உயிர்களைக் கொல்லுதலையும் நிறுத்தல்வேண்டும்" என்று சொல்வாயாக' என்று அனுப்பினான். அவன் சென்று அவ்வாறு சொன்னபோது, அவனை இலவணன் வாளால் வெட்டிக் கொன்று விட்டான்.

தூதன் திரும்பிவாராமையால், அவன் கொல்லப்பட்டானென்று சந்தேகித்து, மாந்தாதா சேனைசூழச் சென்று, மதுபுரியை அடைந்தான். 'நமது நகர்மீது அஞ்சாது படையெடுத்துவந்தவன் ஆராயினும் ஆகுக. அவனையும் அவன் படையையும் அதஞ்செய்வேன்' என்று சிவன் அளித்த சூலத்தோடுவந்து எதிர்த்த இலவணன்மீது மாந்தாதா அளவற்ற அம்புகளை விடுத்தான். அவன், அந்த அம்புகளுக்கெதிராகச் சூலத்தைவிடுத்தான். அது, ஏழுலகமும் இப்போதே முடிந்துவிடும் என்னும்படி ஊழித்தீப்போலச் சுவாலைவீசிக்கொண்டுசென்று மாந்தாதாவையும் சேனையையும் மடியச்செய்து திரும்பவந்து அவன்கையில் அமர்ந்தது. அவன் கையில் அந்தச் சூலம் இருக்கும்போது அவனை வெல்லுதல் செல்லாது. சூலமில்லாமலிருக்கும் சமயம் பார்த்து எதிர்த்தால், அவன் உன்னால் செயிக்கப்படுதல் திண்ணம்' என்று சொன்னார்கள்.

சத்துருக்கன் மதுபுரியை அடைதல்

முனிவர் மொழிந்ததைக் கேட்ட சத்துருக்கன், அவர்களிடம் விடைபெற்றுப்புறப்பட்டு மதுபுரிவாயிலையடைந்தான். இலவணன், போர்செய்யத் சித்தனாய்நின்ற சத்துருக்கனைநோக்கி 'அஞ்சாமல் என் நகர்க்குவந்த நீ யார்? உன்பெயர் யாது? வந்தகாரணம் என்னை? கூறு' எனச் சத்துருக்கன் 'நான் தசரதன்மகன், இராமன்தம்பி, சத்துருக்கனென்னும் பெயரினேன். போர்வேண்டி வந்தேன்' என, இலவணன், '(என் பெரியதாய் கேகசியின் புத்திரனாய்) என்தமயனான இராவணனைச் சுற்றத்தோடு தொலைத்த உன்

தமயனை நான் கண்டதில்லை (கண்டிருந்தாற் கொன்றிருப்பேன்). அந்தப் பழம்பகைவன் தம்பியான நீ யென்னிடம் வந்து அகப்பட்டுக்கொண்டாய். உன்னைக் கொல்லாதுவிடேன். உன் முன்னோனை மாந்தாதா சேனையோடுவந்து என்னுடன் போர்புரிந்து எரிந்து கரிந்து சாம்பலானது தெரிந்திருந்தும் நீ சேனையோடு என்னிடம் வந்து தப்பவழியில்லாமற் சிக்கிக்கொண்டாய்' என்றான்.

இலவணவதம்

வலிய அசுரன் இவ்வாறுகூறிய வார்த்தைகள் செவியில் நுழைந்தபோது, கோபங்கொதித்தெழக் கண்கள் அக்கினிகக்க, யுகாந்தகாலத்துக்கடலின் அதிர்ச்சியோ, ஆலகாலமென்னும்விடத்தின் அதிர்ச்சியோவென மண்ணதிர, மண்ணைச் சுமக்கும் ஆதிசேடன்சென்னியதிர, விண்ணதிர, வஞ்சநெஞ்ச லவணன் எண்ணம் அதிர, வில்லை நாணெறிந்தான் சத்துருக்கன்.* இலவணன், இகழ்ச்சிக்குறியாகக் கைகொட்டி, மலைபோன்ற மராமரமொன்றைப் பிடுங்கிப் பலமாக வீசியெறிந்தான். அதைச் சத்துருக்கன் கணைகளால் கண்டதுண்டமாக்கினான். இலவணன், கோபங்கொண்டு மற்றொரு பெரிய மராமரத்தைப் பிடுங்கியெறிந்தான். அதையும் சத்துருக்கன் அம்புகளால் பலதுண்டங்களாகச் செய்ததல்லாமல், அதை எறிந்தவன் மார்பைத்துளைக்கும்படி பல அம்புகளை எய்தான். அதனால் அவன் உடம்பு உதிரஞ்சொரிய, மிக்க

---

* திண் அசுரன் இவ்வண்ணம் செப்பியசொல்
செவிநுழையச் சீற்றம் பொங்கக்
கண் எரிகான்றிட ஊழிக் கடலென்னக்
கடல்ஆல காலமென்ன
மண் அதிர, மண்சுமந்த மாநாகம்
தலை அதிர, வஞ்சன் நெஞ்சத்
தெண் அதிர, விண் அதிர, இருஞ்சிலையை
நாணெறிந்தான், இராமன் தம்பி. (இப்படலம் கூஅ)

திண் - வலிய. அசுரன், இங்கே இலவணன். கான்றிட - கக்க. மா நாகம் - பெரும்பாம்பு (ஆதிசேடன்). எண் - எண்ணம். இரும் சிலை - பெரிய வில். நாண் எறிதல் - நாணைத்தெறித்து ஒலி எழுப்புதல்.

கோபங்கொண்டு, ஒன்றின்பின்ஒன்றாக உயர்மரங்கள் பலவற்றையெறியச் சத்துருக்கன் வில்லை வளைத்தவண்ணமாகவும் அம்புகளை எய்தவண்ணமாகவும் நிலைபெயராதுநின்று எறியப்பட்ட மரங்களெல்லாவற்றையும் அறுத்துத்தள்ளினன். இராமன் தன் ஆற்றலைப்பற்றிச் சுக்கிரீவன்கொண்ட சந்தேகம் தெளியும்படி எய்துவீழ்த்திய எழுமராமரங்களுள் ஒன்றையும் கடலைக்கடைந்த மந்தரமலையையும் ஒத்த ஒரு மிகப் பெரியமரத்தை இலவணன் பிடுங்கியெறியச் சத்துருக்கன் தளர்ந்து சாய்ந்து விழுந்தான். அது கண்ட இலவணன், 'இவன் இறந்துவிட்டான். என் பகையை வென்றிட்டேன்' என்று எண்ணித் தன் சூலத்தை உபயோகிக்கக் கருதாதிருந்தபோது சத்துருக்கன் தூங்கினவன் எழுந்தாற்போலச் சோர்வுநீங்கியெழுந்தான். எழுந்தவன், 'இனித் தெய்வப் படையைத் தொடுக்கவேண்டுமென்றெண்ணி அதற்கு அர்ச்சனை, தூபம் தீபம் முதலிய பூசைகளை மனத்தினாற்செய்து, அதனைநோக்கி 'எதிரியைக்கொன்று திரும்பிவருவாயாக' என்றுகூறி வில்லிற்றொடுத்து விடுத்தான். அந்தத் தெய்வப்படை உலகங்களனைத்தையும் ஒழித்திடுமென்றெண்ணும்படி ஊழித்தீயும் ஊழிக்காற்றும் ஒன்றுகூடிச் சென்றாற்போலச் சென்று, சூலப்படைவலியுடைமையால் செருக்குமிகுந்து பெரும்பாவஞ்செய்த இலவணனுடைய நெஞ்சூடுருவித் திரும்பிவந்து சத்துருக்கன்கையிலமர்ந்தது. அவன், விண்ணவர் பூமழைபொழிய, வேதியர் ஆசிமொழிய மண்ணவர் மகிழ்ந்து வாழ்த்த மதுபுரியினுள்ளேசென்று, அங்குள்ள மாடமாளிகைகள் கூடகோபுரங்கள் முதலியவைகளைக் கண்டு களித்து, இராவணனுடைய இலங்கையும் இந்திரனுடைய அமராவதியும் குபேரனுடைய அளகாபுரியும் இந்நகருக்கு இணையாகாவென்றெண்ணி வியந்து, அரசிருக்கைமண்டபத்தையடைந்து மாகதர் (-புகழ்வோர்) துதிக்க, மாதர் பல்லாண்டுகூறச் சாமரைகள் பணிமாற, பலவாத்தியங்கள் முழங்கச் சிங்காதனத்தில் அரசுவீற்றிருந்தான்.

௧௩-வது இலவணன்வதைப்படலம் முற்றிற்று

[தொடரும்]

எண்ணும் எழுத்தும்*

எண் என்பது - கணிதம்; இங்கே தமிழ்க்கணக்கைக் குறிக்கின்றது. எழுத்தென்பது - தமிழெழுத்து - இங்கே தமிழ் இலக்கிய இலக்கண நூல்களைக் குறிக்கின்றது. இவ்விருவகை நூல்களையும் மக்களுள் உணர்வுமிகுதியுடையார் விரும்பிக் கற்கவேண்டும்: இதனை வற்புறுத்தி ஔவையார் ஆத்திசூடியில் "எண்ணெழுத்திகழேல்" என்றுகூறிப் பின்னும் கொன்றைவேந்தனில்—"எண்ணுமெழுத்துங் கண்ணெனத்தகும்" என்று விளக்கியருளினர். இவ்விருவகைநூல்களும் முன்னாட்களில் விரிவாயிருந்தன. அவற்றுள் ஒன்றையும் இகழாமல் அறிவுடையார் விரும்பிக் கற்றுவந்தனர். அவ்வாறு கற்றுத்தேர்ந்து †அகக்கண் உடையவர்களான மேன்மக்களை, அரசர்களும் பிரபுக்களும் மதித்துப் போற்றிவந்தனர்.

தமிழ்க்கணக்கைக்கொண்டே தமிழ்மூவேந்தர்களின் அரசாட்சியும் பிற்காலத்தவர் ஆட்சிகளும் நடைபெற்றுவந்தன. மூவேந்தருக்குப்பின்னர்வந்த பல்லவர்களும், மகம்மதியர்களும், மகாராஷ்டிரர்களும் ஆங்கிலேயர்களுங்கூடத் தங்கள் ஆட்சிக்குத் தமிழ்க்கணக்கையே ஆதாரமாகக்கொண்டனர். இம்முறை 19-ஆம் நூற்றுண்டின்முடிவுவரையிலும் இருந்தது.

தமிழ்க்கணிதத்தில், ஒன்றுக்குக்கீழே கீழ்முந்திரிவரையிலுமுள்ள கீழ்எண்களுக்கு உருவங்களும், நெல்முதலிய தானியங்களின் அளவுகளைக்குறிக்கும் எண்களுக்குத் தனியுருவங்களும் இருக்கின்றன. இவற்றையெல்லாம், கிராமங்கள்தோறும் இருந்த

---

* இது, மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் 42-ஆம் வருஷோத்ஸவ மஹாஸபையில் ஸ்ரீ. பண்டித அ. கோபாலையரவர்களால் எழுதிப்படிக்கப்பட்டது.

† "கண்ணுடையரென்பவர்கற்றோர்முகத்திரண்டு
புண்ணுடையர்கல்லாதவர்" (கு. 393)

பள்ளிக்கூடங்களிற் சேர்ந்து பிள்ளைகள் முறையாகப் பயின்றுவந்தனர். அம்முறை வருமாறு:—

(1) அரிச்சுவடி:—இதில் உயிரெழுத்து 12; மெய் 18; உயிர்மெய் 216; ஆய்தம் 1: ஆக 247 எழுத்துக்களும் பனையோலையில் எழுத்தாணியால் எழுதப்பட்டிருக்கும். இச்சுவடியானபிறகு இரண்டெழுத்துப்பெயர், மூன்றெழுத்துப்பெயர் முதலிய சொற்களைச் 'சட்டம்' எழுதிப் பழகுவார்கள். அப்பால் 'ஆத்திசூடி' முதலிய சிறுநூல்கள் தொடங்கப்பெறும்.

(2) இலக்கம்:— இது முந்திரிலக்கம், நெல்இலக்கம் என இருவகைத்து. முந்திரிலக்கத்திலே, முந்திரிமுதல் ஒன்றுவரையுள்ள கீழெண்களும், ஒன்றுமுதல் நூறுநூறாயிரம்வரையிலுமுள்ள மேலெண்களும் எழுதப்பட்டிருக்கும். முந்திரிக்குக்கீழ்ப்பட்ட எண்களும் உண்டு. (முந்திரி 320 கொண்டது ஒன்று; முந்திரிக்குக்கீழே "முந்திரிக்குமுந்திரி கீழ்முந்திரி" என்றபடி— முந்திரியின் 320-ல் ஒருபங்கு "கீழ்முந்திரி" என்று சொல்லப்படும்; இக்கீழ்முந்திரிக்குங்கீழே "இம்மி" என்று ஒன்றுண்டு: இம்மி $10\frac{1}{2}$ கொண்டது கீழ்முந்திரியாகும் எனவே $10\frac{1}{2}\times320\times320=1075200$ இம்மிகொண்டது ஒன்று.) நெல்லிலக்கத்திலே சோடு முதல் கலம் வரையிலுமுள்ள சிற்றெண்களும் கலத்துக்கு மேற்பட்ட உறை, கரிசை, பாரம் முதலியனவும் காட்டப்பட்டிருக்கும். இவ்வெண்கள் நெல்முதலிய தானியங்களை முகந்து அளத்தற்கு உபயோகமாகும். மிராசுதார்கள் "களநடை" "குறிப்பு" முதலிய நெற்கணக்குகளுக்கும் தானியவியாபாரிகளின் கணக்குகளுக்கும் இவ்வெண்களையே உபயோகிப்பார்கள். சோடு 1-க்கு நெல் 360. சோடு 5 கொண்டது அழக்கு; அழக்கு 2=உழக்கு; உழக்கு 2=உரி; உரி 2=நாழி; நாழி 8 = குறுணி; குறுணி 2 = பதக்கு; பதக்கு 2 = தூணி; தூணி 3 = கலம் என்னப்படும். சிற்றெண்கள் முந்திரிலக்கத்துக்கு இருப்பதுபோலவே நெல்லிலக்கத்துக்கும் விரிவாயிருத்தல் ஈண்டுநோக்கத்தக்கது.

மேற்சொன்ன இருவகை இலக்கங்களும் தமிழ்க்கணிதத்திற்குக் கருவிநூல்களாகும். இனிக் கூறப்படும் எண்சுவடிமுதலியன செய்கைநூல்களாம். இவ்விவரம் "எண்ணென்ப ஏனையெழுத்தென்ப இவ்விரண்டும், கண்ணென்ப வாழும் உயிர்க்கு" என்னுந் திருக்குறளுக்குப் பரிமேலழகர் எழுதியிருக்கும் விசேடவுரையால் அறியலாம்.

(3) எண்சுவடி:–இது 30 வாய்களையுடையது. இவ்வாய்கள்,

"நெடுமால் திருமருகா நித்தன் மதலாய்
கொடுமால் வினையகற்றுங் குன்றே—தடுமாறுது
எண்முப் பதுவாயும் என்சித்தத் தேநிற்கப்
பண்ணுத் தமனே பரிந்து"

என்னும் *காப்புச்செய்யுளைத் தலைப்பிற்கொண்டு தொடங்கப்பெறும். இம் முப்பதுவாய்களுள் முதற் பத்துவாய்கள், பேரெண்களின் பெருக்கல்களைக் குறிக்கின்றன. அப்பாலுள்ள முந்திரி, அரைக்காணி, காணி, அரைமா, முக்காணி, ஒருமா, மாகாணி, இருமா, அரைக்கால், மும்மா, மூணுவீசம், நாலுமா, கால், அரை, முக்கால்—என்னும் 15 வாய்கள் சிற்றெண்களைக் குறித்தவை. இவற்றின்பிறகுள்ள நாழி, குறுணி, தூணி, கலம் என்ற நான்கும் நெல்லிலக்கத்தின் பெருக்கல்களைக்குறிக்கும். ஈற்றிலுள்ள சதுரவாய், நில அளவைக்குறித்துநின்று மனைகளைச் சதுரிப்பதற்கு உபயோகமாகும். மேற்கூறப்பட்ட முப்பதுவாய்களையும், காப்புச் செய்யுளில் விநாயகக்கடவுளை மாணவர் வேண்டிக்கொண்டவண்ணம் மனப்பாடம்பண்ணித் தங்கள்சித்தத்தே நிற்கப்பண்ணிக் கொள்ளுவார்கள்.

(4) எண்சுவடிக்குப்பிறகு கீழ்வாயிலக்கம், குழிமாற்று என்னும் இரண்டு சுவடிகளும், கணக்கதிகாரம், ஏரம்பம் முதலிய நூல்களும் உண்டு: இவற்றுள் 'கீழ்வாயிலக்கம்' என்பதில் ஒன்றுக்குக் கீழ்ப்பட்ட எண்களின் பெருக்கல் கூறப்படும். 'குழிமாற்று' என்பது நில அளவைக் குறிக்கின்றது. கணக்கதிகாரம் என்னும் நூல் செய்யுள்வடிவமானது; இதனில்—பொன், இதர பொருள்கள்,

* இவ்வாறே முன்சொன்ன சுவடிகளுக்கும் தனித்தனி காப்பு உண்டு.

எண்ணெய்முதலியவற்றின் நிறை அளவை முதலியன கணக்கிட்டுத் தீரும் வகைகள் காட்டப்பட்டிருக்கும். இந்நூல் பிழையோடு அச்சிடப்பட்டு இரண்டு பதிப்புக்கள் காணப்படுகின்றன. இக்காலத்திற் காணப்படாமல் மறைந்துபோன 'ஏரம்பம்' முதலிய நூல்களும் உண்டு என்பதை, முன்னர்க்காட்டிய "எண்ணென்ப" என்னுந் திருக்குறளின் விசேடவுரையில் "எண்ணென்பது கணிதம்; அது கருவியுஞ்செய்கையும் என இருவகைப்படும்: அவை - ஏரம்பம் முதலிய நூல்களுட்காண்க" என்று ஆசிரியர் பரிமேலழகர்கூறியிருத்தலால் அறியலாம்.

கிராமாந்தரப்பள்ளிக்கூடங்களிலே கணிதவகையில்—இலக்கம், நெல்லிலக்கம், எண்சுவடி, கீழ்வாயிலக்கம், குழிமாற்று என்னும் சுவடிகளோடு நிறுத்தி, இவற்றை உபயோகிக்கும் விதங்களைப் பேர்க்கணக்கு சேவித்தான்கணக்கு வட்டிக்கணக்கு முதலிய கணக்குகளைக்கொண்டு ஆசிரியர்கள் கற்றுக்கொடுப்பார்கள். இவ்வாசிரியர்கள் 'கணக்காயர்' என்று பேர்பெற்றுவிளங்கினார்கள். கிராமங்களிலுள்ள மாணவர்கள் இவ்வளவிலே படிப்பை நிறுத்தித் தங்கள்முன்னோர்கள் கைக்கொண்டிருந்த உழவு, வாணிபம், சித்திரம், தச்சு, கொல் முதலிய தொழிற்கல்விகளைக் கற்றுக்கொள்வார்கள். அவ்வாறன்றி எண், எழுத்து என்னும் இரண்டையும் முற்றக்கற்றும் பிறர்க்குரைத்தும் ஆசிரியர் போராசிரியர் என்று பேர்பெற்று விளங்கினவர்களும் உண்டு. இவ்வாறாக நாடுகளில் மாந்தரனைவரும் ஒவ்வொருவகையிற் கற்றிருந்தார்கள் என்பது,

> "கல்லாதுநிற்பார்பிறரின்மையிற் கல்விமுற்ற
> வல்லாருமில்லை யவைவல்லரல்லாருமில்லை"

என்று கல்வியிற்பெரியாராகிய கம்பர்கூறியதனால் அறியக்கிடக்கின்றது. கணக்காயரிடத்து எண்ணும் எழுத்தும் கற்றோர், இதர கலைகளிற் றேறிவிளங்கினார்கள். அவர்களுள் சிற்பிகளுடைய திறமை இன்றும் சிற்பங்களால் விளங்கிக்கொண்டிருக்கிறது.

தமிழ்மொழிப்பயிற்சியிலேபுக்குக் கணிதமும் இலக்கிய இலக்கணங்களும் கற்றுத்தேறி அகக்கண்ணுடையானவர்கள், அவ்விரண்டையும் *கருவியாகக்கொண்டு "அறம்..பொருள் இன்பம் வீடு என்றிவற்றின்திறம்" கண்டும், தாம் கண்டவற்றை அரசர்முதலாயினார்க்குக் காட்டியும் விளங்கினார்கள். அன்னார் அங்ஙனம் விளங்கினமை அவர்கள் செய்துள்ள நூல்களால் அறியக்கிடக்கின்றது.

இவ்வாறாகத் தமிழ்மொழியினிடத்து ஒளியோடும் விளங்கின எண், எழுத்து என்னும் இரண்டு கண்களும் 19-ஆம் நூற்றாண்டின் ஈற்றில் ஆதரிப்பாரின்றி ஒளிமழுங்கிவருதலைக் கூர்ந்துநோக்கிய தெய்வம்போன்ற ஸ்ரீமான். பாண்டித்துரைத்தேவரவர்கள், 20-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இம் மதுரைத்தமிழ்ச்சங்கத்தைத் தாபித்து, இதன்மூலம் அவ்விருபேரொளியும் உண்டாக்கத்தொடங்கினார்கள். அம்முயற்சி இலக்கிய இலக்கணநூல்வளர்ச்சியாகிய எழுத்தளவிலேமட்டுந்தான் பலித்திருக்கின்றது. அஃதெங்ஙனமெனில், இச்சங்கத்தார் நடாத்திவருகிற 3 பரீக்ஷைகளுக்கும், சருவகலாசாலையார் நடாத்திவருகிற வித்துவான்பரீக்ஷைக்கும் பாடமாயுள்ளவை—எழுத்தின்வகையாகிய இலக்கிய, இலக்கண நூல்களேயாம். இப்பொழுதும் தமிழ்க் கணிதநூல்களைப்பற்றிக் கவனிப்பவரைக் காணேன். நான் கோனார்பட்டில் இருந்தபொழுது தமிழ்க்கணிதத்திற்கும் உயிர்கொடுக்க எண்ணினார்கள் ஸ்ரீமான். மகாதேவமுருகப்பசெட்டியாரவர்கள். அம்முயற்சியும் பயனின்றி ஒழிந்தது.

---

* "அவை கருவியாதல்,

ஆதி முதலொழிய அல்லா தனவெண்ணின்
நீதி வழுவா நிலைமையவால்—மாதே
அறமார் பொருளின்பம் வீடென் றிவற்றின்
திறமாமோ எண்ணிறந்தாற் செப்பு'

'எழுத்தறியத் தீரும் இழிதகைமை தீர்ந்தான்
மொழித்திறத்தின் முட்டறுப்பா னாகும்—மொழித்திறத்தின்
முட்டறுத்த நல்லோன் முதனூற் கருத்துணர்ந்து
கட்டறுத்து வீடு பெறும்'

என்னும் இவற்றான் அறிக" (திருக்குறள் 392, விசேடவுரை.)

இக்காலத்தில் ஒருசாரார் "எங்களுக்கு வடமொழி வேண்டாம்; இந்தி வேண்டாம்; ஆங்கிலமும் வேண்டாம்; எங்கள் தமிழே வேண்டும்; இதனையே முன்னுக்குக்கொணருவோம்" என்று பரிந்துபேசி வருகின்றனர். இவர்களின் தமிழபிமானம் மெச்சத்தக்கதே: ஆனால், ஏனையிரண்டுமொழிகளோடு ஆங்கிலமும் ஒழிந்துபோனால், பின்னர் எம்மொழிக்கணிதத்தைக்கொண்டு தமிழரசு ஆள்வார்களென்பதை அன்னார் தெரிவிக்கக்காணேன்.

ஆதலால், இச்சமயம் தமிழ்ப்புலவர்களும், அபிமானிகளும், சங்கத்தார்களும் ஒன்றுகூடித் தமிழ்க்கணிதத்துக்கு உயிர்கொடுக்க முன்வரவேண்டுமென்று அவர்களெல்லோரையும் நான் வேண்டிக் கொள்ளுகிறேன். எங்கள் ஆசிரியராகிய ஐயங்கார்ஸ்வாமிகளும், இராமநாதபுரம் ஸமஸ்தானவித்வானாகிய ஐயங்கார்ஸ்வாமிகளும், முன்சொன்ன மகாதேவமுருகப்பசெட்டியாரவர்களும், தென்குடித்திட்டைத்திருப்பணியாளராகிய சிவநேசச்செல்வர் ராம. ரு. ராம. இராமசாமிச்செட்டியாரவர்களும் (எனக்குத்தெரிந்தமட்டில்) இத்துறையிலேமுன்னின்று வழிகாட்டவல்லவர்களாயிருக்கின்றார்கள். இன்னும் பெரியார்பலர் இருக்கவுங்கூடும். அன்னாரனைவரையும் தேடிக்கண்டு, அவர்களைத் தமிழரசர்களும், மடாதிபதிகளும், பிரபுக்களும் (துரோணாசாரியரைப் பீஷ்மாசாரியர் ஆதரித்தது போல) ஆதரித்து முயன்றால் நம் தமிழ்க்கணிதத்தை முன்னுக்குக்கொண்டுவரலாம் என்பதிற் சந்தேகமில்லை. இக்காரியத்தில், முன்னே தமிழாராய்ந்த மதுரைக்கடவுளின் திருவருளும் சேர வேண்டும்.

பொங்குமங்களம் எங்கணும் தங்குக.

மதிப்புரை

ஐங்குறுநூறு மூலமும் பழையவுரையும் (மூன்றாம்பதிப்பு):— பதிப்பாசிரியர் திரு. S. கலியாணசுந்தரமையரவர்கள். விலை ரூபா 3–12–0. கிடைக்குமிடம்:—தியாகராஜவிலாசம், 67. பிள்ளையார்கோயில்தெரு, திருவேட்டீசுவரன்பேட்டை, திருவல்லிக்கேணி, சென்னை.

மஹாமஹோபாத்யாய தாக்ஷிணாத்யகலாநிதி டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்களால் முன் இருமுறை பதிக்கப்பெற்ற ஐங்குறுநூறு அவர்கள் எழுதிவைத்த குறிப்புக்களையும் கைப்புத்தகங்களையும் ஆதாரமாகக்கொண்டு, அவர்கள் குமாரர் திரு. S. கல்யாணசுந்தரமையரவர்களால் இப்பொழுது மூன்றாம்முறை பதிக்கப்பெற்றுள்ளது. இதில் ஒவ்வொரு பாட்டின்கீழும் அந்தஅந்தப் பாட்டைப்பற்றி அறியவேண்டியவை குறிப்புரையிலும் மேற்கோளாட்சி என்ற பகுதியிலும் காட்டப்பட்டுள்ளன. முதல் கரு உரிப் பொருள்களின் அகராதி ஒன்றும் நூதனமாகச் சேர்க்கப்பெற்றுளது. இவை பயில்வார்க்கு மிகவும் பயன்படத்தக்கன.

மஹாமஹோபாத்யாய ஐயரவர்கள் நம்மைப்பிரிந்து இரண்டாண்டுகள் ஆயின. வெளியிடும்பொருட்டு அவர்கள் ஆராய்ந்துவைத்த நூல்கள் பல. வெளியிட்டநூல்களிலே சேர்க்கவேண்டியனவாக எழுதிவைத்த குறிப்புக்களும் பல உளவென்று தெரிகிறது. அவையெல்லாம் வெளிவரின் ஆராய்ச்சியாளர்க்குப் பெரிதும் பயன்படும். அவர்கள் நம்மைப்பிரிந்த முதலாண்டின் முடிவில் திருக்கழுக்குன்றக்கோவையும் இரண்டாவதாகிய இவ்வாண்டின் முடிவில் இவ் ஐங்குறுநூற்றுமூன்றாம்பதிப்பும் அவர்கள் குமாரரால் வெளியிடப்பட்டுள்ளன.

நூற்பதிப்புக்குவேண்டிய காகிதம்முதலிய சாதனங்கள் விலைமிக்கும் கிடைப்பதற்கரியவாயும் உள்ள இக்காலத்தில் திரு. கலியாணசுந்தரமையரவர்கள் இந்நூலை நல்லகாகிதத்தில் செவ்வியமுறையில் அச்சிட்டு வெளியிட்டமையால் அவர்களுடைய தமிழ்ப்பற்றும் தந்தைபணிமேற்கொள்ளும் தாளாண்மையும் நன்கு புலனாகும்.

மஹாமஹோபாத்யாய ஐயரவர்கள் ஆற்றிய தமிழ்த்தொண்டினைப் பாராட்டி அவர்கள்திறத்துத் தமிழ்நாட்டார் ஒருங்கியைந்து ஆற்றவேண்டிய கடமைகள் வேறுபலஉளவேனும், அவர்கள் பதித்த நூல்களை ஆதரித்துப் பெற்று அவற்றைநன்கு பயின்றறிந்தொழுகுதல் தமிழ்நாட்டார் ஒவ்வொருவரும் தனித்தனி ஆற்றவேண்டிய கடமைகளில் ஒன்றென்பது மிகையாகாது.

நமது தாய்நாடு:—உலகமெங்கும் பாரதநாட்டு வைதிகசமயக்கொள்கைகளும் அரசியன்முறைகளும் ஒழுக்கநெறிமேம்பாடும் பிறவும் பரவுமாறு முயன்ற பெரியார்களுள் சுவாமி விவேகாநந்தர் முன்னெண்ணத்தக்க பெருமையுடையராவர். இவருடைய உபந்யாஸங்களும் கடிதங்களும் நூல்களும் தொகுக்கப்பெற்று ஆங்கிலத்திற் பலப்பல புத்தகங்களாக வெளியிடப்பட்டுள்ளன. அவையெல்லாம் நம் நாட்டுமக்களும் பயின்று பயன்கொள்ளும்வண்ணம் தமிழாக மொழிபெயர்க்கப்பெற்று வெளிவருதல் இன்றியமையாததாகும். அவற்றுள் பாரதநாட்டின்மேம்பாடுகருதியருளிய சில நல்லுரைகளும் கடிதங்களும் ஆதியவற்றைத் திரட்டிக் கல்கத்தா இராமகிருஷ்ண மாணவர் இல்லத்தார் ஆங்கிலத்தில் வெளியிட்ட புத்தகத்தின் தமிழ்மொழிபெயர்ப்பாகும் நமது தாய்நாடு என்னும் இச்சிறுபுத்தகம். இதனை மொழிபெயர்த்துதவியவர் கல்கிஆசிரியராகிய திரு. ரா. கிருஷ்ணமூர்த்தியவர்கள். பிரசுரித்தோர் சென்னை மயிலாப்பூர் ஸ்ரீராமகிருஷ்ணமடத்தார்.

பாரதநாட்டினரேயன்றி உலகமுழுவதிலும் உள்ள சாதி, சமயம், அரசியல், மொழி, ஒழுக்கமுறை முதலியவற்றால் வேறுபட்ட கொள்கையுடைய பற்பல குழுவினரும் அறிந்து கடைப்பிடித்தொழுகவேண்டிய பல செய்திகள் இதில் நன்கு விளக்கப்பட்டுள்ளன. மொழிபெயர்ப்பின் உரைநடை படிப்போர்க்கு எளிதிற் பொருள்விளங்கி உணர்ச்சியையும் ஊக்கத்தையும் ஊட்டி, மனத்திற் பதியத்தக்கதாய் அமைந்துள்ளது.

இதனைப் பள்ளியிற்பயிலும் மாணவர்க்குப் பாடமாகவைத்துக் கற்பிக்கின் அவர் உள்ளம் தூயராய்ச் செவ்விய நடையுடையராதலோடு சிறந்த தேசத்தொண்டராதலும் கூடும்.

ஆங்கிலமறியாத தமிழரும் படித்துப் பயனடையும்வண்ணம் இதனை மொழிபெயர்ப்பித்துப் பதிப்பித்துதவிய சென்னை மயிலாப்பூர் இராமகிருஷ்ணமடத்தார்க்குத் தமிழ்மக்கள் அளிக்கும் ஆதரவு, சுவாமிகளுதவிய பிறவற்றையும் தமிழாக மொழிபெயர்த்துவெளியிட அவர்களுக்கு ஊக்கமூட்டுவதாயிருக்குமென்று நம்புகிறோம். இதன் விலை ரூபா ஒன்று. வேண்டுவோர் சென்னை மயிலாப்பூர் ஸ்ரீராமகிருஷ்ணமடத்திற் பெறலாம்.

அன்புவிடுதூது:—இது, மயிலத்து முருகவேளைப் பாட்டுடைத்தலைவராகக்கொண்டு, புதுவைப் பண்டவாணிகரான அன்புமாணிக்கனர் என்று வழங்கும் திரு. P. N. இராஜமாணிக்கம்பிள்ளையவர்களால் இயற்றப்பெற்றது; திரு. வித்வான் தே. ஆ. ஸ்ரீநிவாஸாசாரியரவர்கள் எழுதிய குறிப்புரையுடன்கூடியது. இதனுள், மூலத்தால் பிள்ளையவர்களுடைய தமிழ்நூற்பயிற்சியும் தமிழார்வமும் அன்புப்பெருக்கும் செய்யுளியற்றுந்திறமும் பெற்றோர்பால் மிக்க ஈடுபாடும் வெளியாகும். குறிப்புரை மூலத்துக்குவேண்டுமளவில் நவல்பொருள்களைப் பிறநூன்மேற்கோளொடு தெளியவிளக்கிச் செல்வது. மூலமும் உரையும் பலபுலவரால் நன்கு மதிக்கப்பெற்றவை. இதன் விலை அணா 12. வேண்டுவோர் 'முருகவேள் முத்தமிழாகாம், 113. அம்பலத்தாடையர்மடத்துவீதி, புதுவை, (பிரஞ்சிந்தியா)' என்ற விலாசத்திற் பெறலாம்.

ஐங்குறுநூறு (மூலமும் புத்துரையும்):—இது யாழ்ப்பாணத்து ஆரிய திராவிடபாஷாபிவிருத்திசங்கத்தின் மூன்றுவது வெளியீடாகும். உரையாசிரியர் பெயர் முதலிய விவரம் ஒன்றும் தெரியவில்லை. பதிப்பாசிரியர்: தமிழ்நூலறிவொடு பிறமொழிநூலறிவுமுடையவரும் யாழ்ப்பாணத்தில் வசிப்பவரும் ஆகிய திரு. தீ. சதாசிவையரவர்களாவர்.

இப்பதிப்பின்கண் முகவுரையில் பத்துப்பாட்டு எட்டுத்தொகை பதினெண்கீழ்க்கணக்குநூல்களின் விவரமும், ஐங்குறுநூற்றுநூற்பகுதிகளின் விவரமும், அவற்றை இயற்றியோர் தொகுத்தோர் தொகுப்பித்தோர் வரலாறுகளும், நூலுள் ஒவ்வொருபாட்டின்கீழும் கருத்தும் பொருளும் மெய்ப்பாடு பயன் முதலிய இலக்கணக் குறிப்புக்களும் நூலின் இறுதியில் செய்யுளகராதி அரும்பத அகராதிகளும் சேர்க்கப்பட்டுள்ளன.

இதன் பதிப்புரையில் இப்புத்துரையானது மஹாமஹோபாத்யாய டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள் வெளியிட்ட மூல்பாடத்தையும் பழையவுரையையும் ஆதாரமாகக்கொண்டு எழுதப்பட்டதென்று காணப்படினும், இரண்டையும்வைத்து ஒப்புநோக்கி ஆராய்வார்க்கு அவ்விரண்டும் பலப்பல இடங்களில் வேறுபடுதல் புலனுகாமல் இராது. ஆதலின் அவை தமிழறிஞரால் நன்கு ஆராய்ந்தேகொள்ளத்தக்கனவாய் உள்ளன. இதன் விலை ரூபா 3—5—0. வேண்டுவோர் யாழ்ப்பாணத்துச் சுன்னுகம் ஆரிய திராவிடபாஷாபிவிருத்திசங்கத்திற் பெறலாம்.

நமது தாய்நாடு:—உலகமெங்கும் பாரதநாட்டு வைதிகசமயக்கொள்கைகளும் அரசியன்முறைகளும் ஒழுக்கநெறிமேம்பாடும் பிறவும் பரவுமாறு முயன்ற பெரியார்களுள் சுவாமி விவேகாநந்தர் முன்னெண்ணத்தக்க பெருமையுடையராவர். இவருடைய உபந்யாஸங்களும் கடிதங்களும் நூல்களும் தொகுக்கப்பெற்று ஆங்கிலத்திற் பலப்பல புத்தகங்களாக வெளியிடப்பட்டுள்ளன. அவையெல்லாம் நம் நாட்டுமக்களும் பயின்று பயன்கொள்ளும்வண்ணம் தமிழாக மொழிபெயர்க்கப்பெற்று வெளிவருதல் இன்றியமையாததாகும். அவற்றுள் பாரதநாட்டின்மேம்பாடுகருதியருளிய சில நல்லுரைகளும் கடிதங்களும் ஆதியவற்றைத் திரட்டிக் கல்கத்தா இராமகிருஷ்ண மாணவர் இல்லத்தார் ஆங்கிலத்தில் வெளியிட்ட புத்தகத்தின் தமிழ்மொழிபெயர்ப்பாகும் நமது தாய்நாடு என்னும் இச்சிறுபுத்தகம். இதனை மொழிபெயர்த்துதவியவர் கல்கிஆசிரியராகிய திரு. ரா. கிருஷ்ணமூர்த்தியவர்கள். பிரசுரித்தோர் சென்னை மயிலாப்பூர் ஸ்ரீராமகிருஷ்ணமடத்தார்.

பாரதநாட்டினரேயன்றி உலகமுழுவதிலும் உள்ள சாதி, சமயம், அரசியல், மொழி, ஒழுக்கமுறை முதலியவற்றால் வேறுபட்ட கொள்கையுடைய பற்பல குழுவினரும் அறிந்து கடைப்பிடித்தொழுகவேண்டிய பல செய்திகள் இதில் நன்கு விளக்கப்பட்டுள்ளன. மொழிபெயர்ப்பின் உரைநடை படிப்போர்க்கு எளிதிற் பொருள்விளங்கி உணர்ச்சியையும் ஊக்கத்தையும் ஊட்டி, மனத்திற் பதியத்தக்கதாய் அமைந்துள்ளது.

இதனைப் பள்ளியிற்பயிலும் மாணவர்க்குப் பாடமாகவைத்துக் கற்பிக்கின் அவர் உள்ளம் தூயராய்ச் செவ்விய நடையுடையராதலோடு சிறந்த தேசத்தொண்டராதலும் கூடும்.

ஆங்கிலமறியாத தமிழரும் படித்துப் பயனடையும்வண்ணம் இதனை மொழிபெயர்ப்பித்துப் பதிப்பித்துதவிய சென்னை மயிலாப்பூர் இராமகிருஷ்ணமடத்தார்க்குத் தமிழ்மக்கள் அளிக்கும் ஆதரவு, சுவாமிகளுதவிய பிறவற்றையும் தமிழாக மொழிபெயர்த்துவெளியிட அவர்களுக்கு ஊக்கமூட்டுவதாயிருக்குமென்று நம்புகிறோம். இதன் விலை ரூபா ஒன்று. வேண்டுவோர் சென்னை மயிலாப்பூர் ஸ்ரீராமகிருஷ்ணமடத்திற் பெறலாம்.

அன்புவிடுதூது:—இது, மயிலத்து முருகவேளைப் பாட்டுடைத்தலைவராகக்கொண்டு, புதுவைப் பண்டவாணிகரான அன்புமாணிக்கனுர் என்று வழங்கும் திரு. P. N. இராஜமாணிக்கம்பிள்ளையவர்களால் இயற்றப்பெற்றது; திரு. வித்வான் தே. ஆ. ஸ்ரீநிவாஸாசாரியரவர்கள் எழுதிய குறிப்புரையுடன்கூடியது. இதனுள், மூலத்தால் பிள்ளையவர்களுடைய தமிழ்நூற் பயிற்சியும் தமிழார்வமும் அன்புப்பெருக்கும் செய்யுளியற்றுந்திறமும் பெற்றோர்பால் மிக்க ஈடுபாடும் வெளியாகும். குறிப்புரை மூலத்துக்குவேண்டுமளவில் நுவல்பொருள்களைப் பிறநூன்மேற்கோளொடு தெளியவிளக்கிச் செல்வது. மூலமும் உரையும் பலபுலவரால் நன்கு மதிக்கப்பெற்றவை. இதன் விலை அணு 12. வேண்டுவோர் 'முருகவேள் முத்தமிழாகரம், 113. அம்பலத்தாடையர்மடத்துவீதி, புதுவை, (பிரஞ்சிந்தியா)' என்ற விலாசத்திற் பெறலாம்.

ஐங்குறுநூறு (மூலமும் புத்துரையும்):—இது யாழ்ப்பாணத்து ஆரிய திராவிடபாஷாபிவிருத்திசங்கத்தின் மூன்ருவது வெளியீடாகும். உரையாசிரியர் பெயர் முதலிய விவரம் ஒன்றும் தெரியவில்லை. பதிப்பாசிரியர்: தமிழ்நூலறிவொடு பிறமொழிநூலறிவுமுடையவரும் யாழ்ப்பாணத்தில் வசிப்பவரும் ஆகிய திரு. தீ. சதாசிவையரவர்களாவர்.

இப்பதிப்பின்கண் முகவுரையில் பத்துப்பாட்டு எட்டுத்தொகை பதினெண்கீழ்க்கணக்குநூல்களின் விவரமும், ஐங்குறுநூற்றுநூற்பகுதிகளின் விவரமும், அவற்றை இயற்றியோர் தொகுத்தோர் தொகுப்பித்தோர் வரலாறுகளும், நூலுள் ஒவ்வொருபாட்டின்கீழும் கருத்தும் பொருளும் மெய்ப்பாடு பயன் முதலிய இலக்கணக் குறிப்புக்களும் நூலின் இறுதியில் செய்யுளகராதி அரும்பத அகராதிகளும் சேர்க்கப்பட்டுள்ளன.

இதன் பதிப்புரையில் இப்புத்துரையானது மஹாமஹோபாத்யாய டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள் வெளியிட்ட மூலபாடத்தையும் பழையவுரையையும் ஆதாரமாகக்கொண்டு எழுதப்பட்டதென்று காணப்படினும், இரண்டையும்வைத்து ஒப்புநோக்கி ஆராய்வார்க்கு அவ்விரண்டும் பலப்பல இடங்களில் வேறுபடுதல் புலனுகாமல் இராது. ஆதலின் அவை தமிழறிஞரால் நன்கு ஆராய்ந்தேகொள்ளத்தக்கனவாய் உள்ளன. இதன் விலை ரூபா 3—5—0. வேண்டுவோர் யாழ்ப்பாணத்துச் சுன்னுகம் ஆரிய திராவிடபாஷாபிவிருத்திசங்கத்திற் பெறலாம்.

மொழிநட்பு*

(வடமொழியும் தென்மொழியும்)

மதுரை உயர்தரநீதிமன்றத்து வழக்கறிஞர்

ஸ்ரீ. அ. அரங்கசுவாமி ஐயரவர்கள்.

உலகின்கண் தற்பொழுது வழங்கிவரும் பற்பல பாஷைகளையும், அவைகளின் முற்போக்கு பிற்போக்குகளையும் ஆராய்ச்சிசெய்திடில் இத்தேசத்தில் வழங்கிவரும் வடமொழியும் தென்மொழியும் சிலகாரணங்களால் மற்றப்பாஷைகளைக்காட்டிலும் விசேஷநிலைமையுடன்கூடிநிற்கின்றன. அவைகள் எக்காலத்தில் இவ்வுலகில் தோன்றின என்பது சரித்திர ஆராய்ச்சியால் இதுகாறும் அறியப்படவில்லை. ஆனால் அவ்விரண்டுபாஷைகளும் இப்பாரதபூமியில் இருபெரு மூலவிருக்ஷங்கள்போல் தோன்றி, ஓங்கி வளர்ந்து, இத்தேசத்தின் இருபெரும்பகுதிகளில் அபிவிருத்திபெற்று, இரண்டாயிரம்வருடங்களுக்குமுன்னரே இலக்கண இலக்கியங்களால் சிறப்புற்று, மதம், தத்துவசாஸ்திரம், விஞ்ஞானம், கலை, ஆத்மஞானம், நாகரிகம், முன்னேற்றம் முதலான பலதுறைகளில் இன்றியமையாத கருவிகளாக விளங்கி வந்திருக்கின்றன. அவைகளினின்று பற்பல கிளைப்பாஷைகள் பிரிந்து விரிவுபெற்றுத் தனித்தனியே அவைகளுக்குரிய இலக்கண இலக்கியங்களை உண்டுபண்ணிக்கொண்டு இக்காலத்திலே பல்லாயிரம்மக்களுள் வழங்கிவருகின்றன. வடமொழியை ஹிந்தி, வங்கம், ஒட்டரம், குர்ஜ்ஜரம், மகாராட்டிரம் முதலிய பாஷைகள் தாய்ப்பாஷையாகப் போற்றுகின்றன. தமிழைத் தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு முதலிய பாஷைகளுக்குத் தாய்ப்பாஷையாக எல்லோரும் ஏற்றுக்கொண்டு தெளிவுறப்போற்றுவது புலப்படாமலிருப்பினும், அப்பாஷைகளுக்கெல்லாம் தமிழ்ப்பாஷையே மூலம் என்பது அவைகளுக்குப் பொதுவாயுள்ள பல ஆதிப்பகுதிப்பதங்களை ஒத்துப்பார்த்து ஆராய்ச்சிசெய்வதாலும் அப்பாஷைகளின் பூர்வஅமைப்புக்களைக் கவனித்துப்பார்ப்பதாலும் அவைகளெல்லாம் வடமொழியினின்று வேறுபட்ட திராவிடமொழிக்கூட்டத்தைச் சேர்ந்தவைகளென்று தீர்மானிக்கத்தகும்.

---

*இது, மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் 42-ஆம் வருஷோத்ஸவ மஹாஸபையிற் படிக்கும்படி எழுதியனுப்பப்பெற்றது.

நமது தேசத்தின் வடபாகத்தில் தென்மொழி வளர்ச்சியுற்றநிலைமையில் வியாபித்துப் பரவாமற்போயினும், திராவிடமொழிக்கூட்டத்திற் சேர்ந்த சில பாஷைகள் அப்பாகத்திலே தற்பொழுது வாழ்ந்துவரும் சில பூர்வ ஜாதியார்களுக்குள் வழங்கிவருகின்றன. தென்னிந்தியாவில் இடைச்சங்ககாலத்தில் வழங்கிவந்த இலக்கணங்களில் ஒன்றாகிய தொல்காப்பியத்திற்குச் சிறப்புப்பாயிரம் இயற்றிய பனம்பாரனார் "வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ்கூறு நல்லுலகத்து வழக்கும் செய்யுளுமாய்"த் தமிழ் இருந்ததாகக் கூறுகின்றனர்.

வடமொழி, தென்மொழி இவைகளின் ஆதியை அறியக்கூடாமையால் சிவபிரானது டமரக ஒலியினின்று வடமொழியின் அக்ஷர ஒலிகள் வெளித்தோன்றினவென்றும் குமரக்கடவுளருளால் அகத்தியன் தமிழ்ப்பாஷையை நன்கமைத்துப் பேரகத்தியம் சிற்றகத்தியம் என்ற இரண்டு இலக்கண நூல்களை இயற்றினனென்றும் கூறும் புராணகதைகள் அவ்விருபாஷைகளின் பழமைக்கே சான்றாயிருக்கின்றன. வடமொழியிலே பிரசித்திபெற்ற இலக்கணநூலாகிய அட்டாத்தியாயி என்ற வியாகரணசாத்திரத்தைப் பாணினிமுனி இயற்றுமுன் ஐந்திரம் என்ற வியாகரணநூல் வடமொழியில் வழங்கிவந்தது. மேற்சொல்லிய பனம்பாரனார் அகத்தியமுனிவரின் ஒரு சீடராயிருந்து அகத்தியமுனிவரின் மற்றொருசீடராகிய தொல்காப்பியரை அச்சிறப்புப்பாயிரத்தில் "ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியனெனத் தன் பெயர் தோற்றிப் பல்புகழ் நிறுத்த படிமையோனே" என்று புகழ்கின்றனர்.

வடமொழியிலே பாணினிமுனிவரால் இயற்றப்பட்ட இலக்கணநூலுக்குப் பதஞ்சலிமுனிவர் மகாபாடியம் என்ற பிரபல உரையைச் செய்தனர். பதஞ்சலிமுனிவர் வடதேசத்தில் வாழ்ந்துவந்தகாலத்தை நாம் நிச்சயத்துடன் ஒருவாறு முடிவுகூறலாம். அவர் இயற்றிய மகாபாடியத்தில் யவனர் 'சாகேத'நகரத்தை முற்றுகைசெய்தனரென்றும் 'மாத்தியமிகர்' என்ற வகுப்பினரின் பிரதேசத்தை முற்றுகைசெய்தனரென்றும் வடமொழியில் வழங்கிவரும் ஒருவித இறந்தகாலவினைச்சொல்லுக்கு உதாரணங்களாகக் கூறியிருக்கின்றனர். இந்தியாவின் வடமேற்குப்பாகங்களில் அரசுசெலுத்திவந்த மினாந்திரன் என்ற யவனஅரசன் சாகேதநகரை முற்றுகைசெய்திருக்கக்கூடியவன் என்றும் அவன் கிறிஸ்து அவதரிக்குமுன் 140-ம் ஆண்டுமுதல் 120-ம் ஆண்டுவரை அரசுசெலுத்திவந்தான் என்றும் சரித்திர ஆராய்ச்சியால் வெளியாகின்றது. மாத்தியமிகர்கள் நாகார்ஜுனர் என்ற பௌத்தமதப் பெயர்பெற்ற ஆசிரியரின் தத்துவசாஸ்திரத்தைக் கைப்பற்றின ஒரு

கூட்டத்தாரென்று வெளியாகின்றது. பதஞ்சலிமுனிவர் உதாரணமாகக் கொண்ட இறந்தகாலவினைச்சொல்லானது அவர் நேரிலே காணாத அவர் காலத்தில் நிகழ்ந்த சம்பவங்களைக் குறிப்பிடுகின்றது. தவிரவும் பதஞ்சலி முனிவர் இயற்றிய மகாபாடியத்திலேயே மகததேசத்தில் அரசுசெலுத்தி வந்த மோரிய அரசவம்சத்தார்காலத்திற்குப்பிறகு பதஞ்சலிமுனிவர் தோன்றினாரென்றும் வெளியாகின்றது. ஆகையால் மேற்சொல்லிய காரணங் களைக்கொண்டு பதஞ்சலிமுனிவர் மகாபாடியத்தைக் கிறிஸ்துபிறப்பதற்கு முன் 140-ம் ஆண்டுமுதல் 120-ம் ஆண்டுக்குள் இயற்றினாரென்று முடிவு செய்யத்தகும். பாணினிமுனிவரால் இயற்றப்பட்ட வியாகரணநூல் அதற்குமுன் பிரசித்திபெற்று வழங்கிவந்த வடமொழி வியாகரணங்களையெல் லாம் தள்ளிவிட்டு முன்னேற்றம்பெறவும், அதற்கு மகாபாடியம் என்ற பேருரையை அமைக்கத்தக்க ஓர் உயர்நிலை ஏற்படவும் போதுமான காலம் நிகழ்ந்திருக்கவேண்டும். அக்காலத்தை நிர்ணயிக்குங்கால் பாணினி முனிவரும் புத்தர்காலத்திற்குமுன் இருந்தாரென்றும் சில ஆராய்ச்சிக் காரர்கள் துணிவுடன் கூறுகின்றனர்.

ஆகையால் 'ஐந்திரம்நிறைந்த' தொல்காப்பியர் பாணினிமுனிவரின் வியாகரணசாத்திரம் பிரபலமடையுமுன்னும் ஐந்திர இலக்கணம் வழங்கி வந்தகாலத்திலும் வாழ்ந்துவந்தனரென்று நம்மால் முடிவுகொள்ளத் தகும். தவிரவும் மகததேசத்தின் பிரதானநகரான பாடலிபுரத்தில் கிறிஸ்துபிறப்பதற்குமுன் 315-ம் ஆண்டு அரசுசெலுத்திய மௌரிய வம்சத்து அரசனாகிய சந்திரகுப்தனுடைய அமைச்சர் கௌடில்யர் என்பவ ராலோ அல்லது அவரது ஆதரவிலோ இயற்றப்பட்ட அர்த்தசாத்திரம் என்ற வடமொழிப் பொருள்நூலின்கண் சில மொழிகள் பாணினிசூத்திரங் களிலே கூறியுள்ள சில இலக்கணவிதிகளுக்கு முரணாக இருப்பதால், அக் காரணம்பற்றி அக்காலத்திலே பாணினிமுனிவரால் இயற்றப்பட்ட வட மொழியிலக்கணநூல் எல்லோராலும் முழுதும் தழுவப்படவில்லையென்று கூற இடமேற்படுகின்றது. தொல்காப்பியத்திற்குப் பனம்பாரனார் இயற் றிய சிறப்புப்பாயிரத்துக்குப் பாரத்துவாசி நச்சினார்க்கினியர் செய்த வுரை யில் தொல்காப்பியர் ஜமதக்கினிமுனிவரின்மகனென்றும், அவருக்கு வட மொழியில் திரணதூமாக்கினியார் என்ற பெயர் உண்டென்றும், அத்தொல் காப்பியநூலைப் பாண்டியன் அவையத்தில் நான்மறைமுற்றிய அதங்கோட் டாசிரியர் என்ற அகத்தியமுனிவரின் மற்றொருசீடர்முன்பாக, "மயங்கா மரபின் எழுத்துமுறை" காட்டினாரென்றும், அந் நான்மறை தைத்திரீயமும், தலவகாரமும், சாமவேதமும் கொண்ட வேதமென்றும், தொல்காப்பியநூல்

செய்தபின்னர்த்தான் வேதவியாஸர் வேதத்தை இருக்கு, யசுர், சாமம், அதர்வம் என்ற நான்குகூறுகச் செய்தனர் என்றும், தொல்காப்பியத்திற்குமுன் "அகத்தியமும் மாபுராணமும், பூதபுராணமும், இசைநுணுக்கமும் அவற்றுட் கூறிய எழுத்து சொல் பொருள் யாப்பும், சந்தமும், வழக்கியலும், அரசியலும், அமைச்சியலும், பார்ப்பனவியலும், சோதிடமும், காந்தருவமும், கூத்தும், பிறவும்" முந்திய நூல்களென்றும் கூறுகின்றனர். இக்காரணங்களைக்கொண்டு கிறிஸ்துபிறப்பதற்கு மூன்றுநூற்றுண்டுகளுக்கு முன்னரே பல அறிவுத்துறைகளில் முன்னேற்றம் பெற்றுத் தமிழ்ப்பாஷை விளங்கிநின்றதென்று வெளியாகிறது.

மேற்சொல்லிய முடிவை உறுதிப்படுத்துவதற்குப் பாணினிமுனிவர் அவர்பெயரால் உள்ள வடமொழிவியாகரணசூத்திரங்களை இயற்றியகாலத்தில் யாக்ஞவல்கியர் ஆகிய வாஜஸநேயரால் சுக்கிலயசுசங்கிதையானது தொகுக்கப்படவில்லையென்று சில வைதிக க்ரந்த ஆராய்ச்சிக்காரரால் கூறப்படுகிறது. அக்காரணத்தால் சுக்கிலயசுர்வேதமானது நச்சினுர்க்கினியர் உரையிலே கூறப்படவில்லையென்று ஊகிக்க இடம் ஏற்படுகின்றது.

சந்திரகுப்தனுடைய பேரனுகிய அசோகஅரசன் பாடலிபுரத்தில் அரசாண்டகாலத்திலே பாண்டியதேசத்திலே புத்தமதக்கொள்கைகளைப் பரவச்செய்ய ஆசிரியர்களை அனுப்பினதாக அவனது கல்வெட்டுக்களால் வெளியாகின்றது. விவிலியநூலின் பழைய ஏற்பாட்டிலே கூறப்பட்டுள்ள யூதஅரசன் சலோமன்காலத்திலே தென்னிந்தியாவிலிருந்து அவனுல் நிர்மாணிக்கப்பட்ட யூதஆலயத்தின் உபயோகத்திற்காக, தமிழ்ப்பாஷை வழங்கிநின்ற பிரதேசங்களிலிருந்து மயில், அகில் முதலியவைகள் ஏற்றுமதி செய்யப்பட்டனவென்பதைக் காட்டுவதற்கு யூதபாஷையில் வழங்கும் தோகை அகில் முதலிய பதங்களிலிருந்து எடுத்துக்கொள்ளப்பட்ட சொற்களே சான்றுகும்.

தவிரவும், தமிழிலிருந்து தமிழ்நாட்டில் ஆதியிற்கையுற்பத்திபெற்ற தானியத்தின்பெயராகிய 'அரிசி' என்னும் சொல் கிரேக்கபாஷையில் ஒரிஸா (Oriza) என்று திரிந்து ஆங்கிலத்தில் (Rice) என்று மாறியிருக்கிறது. அதுவே கிரேக்கர்களுக்கும் தென்னிந்தியாவுக்கும் ஏற்பட்ட தொடர்பைக் குறிக்கின்றது.

தமிழ்ச் சொல்லாகிய 'முத்து' என்ற வார்த்தையானது வடமொழியில் "முக்தா" என்று திரிந்து உபயோகப்பட்டுவருகின்றது. இதற்காதாரவாகக் கௌடில்யருடைய அர்த்தசாத்திரத்தில் முத்துக்கள் பலவகைப்பட்டன

என்றும் அவைகளில் இருவகைமுத்துக்களின்பெயர்கள் (தாம்ரபர்ணியில் உற்பத்தியாகிற ஒருவகைமுத்து) "தாம்ரபர்ணிகம்" என்றும், (பாண்டிய கவாடத்தில் உண்டாகும் ஒருவகை முத்து) "பாண்டியகவாடம்" என்றும் சொல்லப்படுகின்றன. இக்காலத்திலும் தென்னிந்தியாவுக்கும், இலங்கைத் தீவிற்கும் மத்தியிலுள்ள கடற்பிரதேசங்களில் முத்துக்கள் உண்டாவதை நாம் காண்கிறோம்.

இரண்டாயிரம்வருடங்களுக்குமுன் திருவள்ளுவரால் குறள்நூல் இயற்றப்பட்டதென்று சரித்திர ஆராய்ச்சிக்காரரால் ஒப்புக்கொள்ளப்படுகின்றது. குறள்நூல் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்ற மூன்று பாகுபாட்டினை உடையது. வால்மீகிமுனிவரால் இயற்றப்பட்ட ராமாயணத்திலும் மகாபாரதத்திலும் மற்ற வடமொழிக்கிரந்தங்களிலும் 'தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம்' என்ற நான்குபுருஷார்த்தங்கள் அடிக்கடி கூறப்படுவதால், அவைகளிலே சொற்களால் விவரிக்கத்தகாத மோக்ஷத்தை அல்லது வீட்டை விலக்கி, மற்றை முதன்மூன்று (வாழ்க்கையின் நோக்கங்களாகிய அறம், பொருள், காமம் இவைகளைப்பற்றிய) விஷயங்களைத் திருவள்ளுவர் "வடநூலார்வழக்குப்பற்றி, அறத்துப்பால்விஷயங்களை மனுமுதலிய நூல்களோடும், பொருட்பாலைச் சாணக்கியன் காமந்தகன் என்பார் இயற்றிய நூல்களோடும், காமத்துப் பாலை வாத்சியாயனம் முதலியவற்றோடும் பொருந்தவைத்துக் கூறினர்" என்பது சில உரையாசிரியரின் துணிபாகும்.

அறத்துப்பாலில் முதல் அதிகாரம் கடவுள்வாழ்த்துப்பற்றியது. அதில் இரண்டாவது குறளிலே கடவுளை "மலர்மிசையேகினன்" என்று கூறுகிறார். இதயமாகிய தாமரைமலர்போன்ற ஸ்தானத்திலே கடவுள் உளன் என்று வடமொழிஞானநூல்களிலே சொல்லியிருப்பது அக்குறளுடன் ஒப்பிடத் தக்கது.

அறத்துப்பால் மூன்றும் அதிகாரத்தில் நீத்தார்பெருமையைப்பற்றிக் கூறும்,

"ஐந்தவித்தா னாற்ற லகல்விசும்பு ளார்கோமான்
இந்திரனே சாலுங் கரி"

என்ற குறளில் வள்ளுவர் இந்திரனைக் கௌதமமுனிவர் சபித்த புராணக் கதையை உதாரணமாக எடுத்துக்காட்டியிருக்கின்றனர்.

இல்வாழ்க்கை என்ற ஐந்தாம் அதிகாரத்தில்,

"தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்க லானென்றாங்
கைம்புலத்தா றோம்ப றலை"

என்ற குறளிலே பிதிரர்க்கும், தெய்வத்திற்கும், விருந்திற்கும், இனத்திற்கும், தனக்கும் தருமம்செய்தல் தலைமையான தருமமென்று வள்ளுவர் கூறுகின்றனர். இவைகளில் முதன்மூன்றும் வடமொழியில் வழங்கிவரும் ஐந்து யக்ஞங்களில் அடங்கியிருக்கின்றன.

> "அறனெனப் பட்டதே யில்வாழ்க்கை யஃதும்
> பிறன்பழிப்ப தில்லாயி னன்று"

என்ற குறளில் இல்லறம் துறவறம் என்ற இரண்டு அறங்களிலும் இல்வாழ்க்கையே அறம் என்று சிறப்பித்துச்சொல்லப்பட்டிருக்கின்றது. மனு தர்மசாத்திரத்திலும், கிரகஸ்தாசிரமம் மற்ற மூன்று ஆசிரமங்களுக்கும் ஆதாரமாய் இருத்தலாற் சிறப்புற்றதென்று எடுத்துக்கூறப்பட்டிருக்கின்றது.

> "இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
> நல்லாற்றி னின்ற துணை"

என்ற குறள் இங்கு நோக்கத்தகும்.

அறத்துப்பால் ஆறும் அதிகாரத்தில் கற்புடை மனையாளைப்பற்றித்

> "தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
> பெய்யெனப் பெய்யும் மழை"

என்று கூறியிருக்கிறார். அதே கொள்கை வால்மீகிராமாயணம் அயோத்தியா காண்டத்திலே "கணவன் மனைவிக்குத் தெய்வத்திற்குச்சமானம்" என்று சீதை இராமனுடன் சொல்வதிலும், அவ்வாறே அயோத்தியாகாண்டத்தில் அத்திரிரிஷியின்பத்தினியாகிய அநசூயை சீதைக்கு அதே உபதேசம்செய்வதிலும் காணப்படுகின்றது.

அறத்துப்பாலில் ஒழுக்கமுடைமைபற்றிய 14-ம் அதிகாரத்தில்

> "மறப்பினு மோத்துக் கொளலாகும் பார்ப்பான்
> பிறப்பொழுக்கங் குன்றக் கெடும்"

என்ற குறளிலே, 'பார்ப்பான் வேதத்தைக் கற்று மறந்தாலும் மறுபடியும் கற்கலாம். அவனது ஒழுக்கம் குறைந்திடில் அவனுடைய பிறப்பால் ஏற்பட்டுள்ள உயர்ந்த வருணமானது அழியும்' என்று சொல்லப்பட்டிருக்கின்றது. இதுபோல் மகாபாரதத்தில் யுதிட்டிரர் "எவன் பிராம்மணன்?" என்ற கேள்விக்குப் "பிறப்பு, ஸம்ஸ்காரம், வேதமோதுதல், சந்ததி இவைகள் இருபிறப்புக்குக் காரணம் அல்ல, ஒழுக்கமே காரணம்" என்று விடையளித்தனர்.

பொருட்பாலில் இறைமாட்சி என்ற 39-ம் அதிகாரத்திலே

> "படைகுடி கூழமைச்சு நட்பரண் ஆறும்
> உடையா னரசரு ளேறு"

என்ற குறளில் அரசியல் ஏழு அங்கங்களுடன் கூடியுள்ளதாக வள்ளுவர் கூறுகின்றனர். அவையான: 1 அரசன் 2 அமைச்சன் 3 நாடு 4 கோட்டை 5 பொக்கிஷம் 6 சேனை 7 நண்பன் என்பனவாம். இதுபோலவே கௌடில்யர் அர்த்தசாத்திரத்திலும் அரசியலின் அங்கங்களை ஏழுபிரிவுகளாக வகுத்திருக்கின்றனர்.

வடமொழியில் ஆறு சாத்திரங்களில் ஒன்றாகிய சாங்கியசாத்திரத்தில் பிரகிருதியும் புருடனும் ஒன்றுசேர்ந்து பிரபஞ்சத்திற்குக்காரணம் என்றும் இப்பிரபஞ்சத்தில் ஐந்து தன்மாத்திரைகள், ஐந்து பூதங்கள், ஐந்துகர்மேந்திரியங்கள், ஐந்து ஞானேந்திரியங்கள், மகத்து, அகங்காரம், மனம், மூலப்பிரகிருதி இவைகளுடன் புருடன் சேர்ந்து 25தத்துவங்கள்உள்ளனவென்று சொல்லியிருப்பதைத் திருவள்ளுவர் அறத்துப்பால் நீத்தார்பெருமையென்ற மூன்றாம் அதிகாரத்திலே,

"சுவையொளி யூறோசை நாற்றமென் றைந்தின்
வகைதெரிவான் கட்டே யுலகு"

என்ற குறளிலே சுருக்கமாகக்கூறி, அத்தத்துவங்களின் கூறுபாட்டை ஆராய்ந்து அறிபவனிடத்தே உலகு இருப்பதாகக் கூறியுள்ளார்.

ஆங்காங்குச் சிற்சில குறட்செய்யுள்களைமட்டும் மேற்சொல்லிய பிரகாரம் ஆராய்ந்துபார்ப்பதனாலேயே 2000-வருஷங்களுக்குமுன்னரே இத்தமிழ்நாட்டில் வடமொழியும் தென்மொழியும் வெவ்வேறு பாஷைகளாக வழங்கிவந்தபோதிலும் அவைகளைச் சாதனங்களாகப்பெற்ற அறிவும், கலைகளும், நாகரிகமும், உயர்தர வழக்கவொழுக்கங்களும் ஒன்றுகூடி ஐக்கியம் பெற்றுவந்தனவென்று நன்கு புலப்படும். இம் முடிவை நன்கு நிலைநிறுத்துவதற்கு இன்னும் அநேக செய்யுட்களைத் திருக்குறளிலிருந்து உதாரணங்களாக எடுத்துக்கூறலாம். அப்படிச் செய்யின் இவ்வியாஸம் விரிவடையும்.

வடமொழி, தென்மொழி இவைகளின் பழமைக்கு ஒரு மேற்கோளாக இன்னுமொரு பழையநூலாகிய திருமூலநாயனாரால் இயற்றப்பட்ட பத்தாம் திருமுறை என்ற திருமந்திரத்தின் பாயிரத்திலுள்ள,

"மாரியுங் கோடையும் வார்பனி தூங்கநின்
றேறியு நின்றங் கிளைக்கின்ற காலத்து
ஆரிய முந்தமி ழும்முட னேசொலிக்
காரிகை யார்க்குக் கருணைசெய் தானே"

என்ற செய்யுளிலே சங்காரத்துக்குப் பிறகும் மறுசிருஷ்டிதொடங்குமுன்னும் சிவபெருமான் ஆரியமும் தமிழுமாகிய வடமொழி தமிழ்மொழிகளிலுள்ள பதிஞானங்களைப் பார்வதிதேவியாருக்கு உபதேசித்தருளினர் என்று திருமூலர் கூறுகின்றனர். அதுபோலவே,

"அவிழ்க்கின்ற வாறு மதுகட்டு மாறுஞ்
சிமிட்டலைப் பட்டுயிர் போகின்ற வாறுந்
தமிழ்ச்சொல் வடசொல் லெனுமிவ் விரண்டு
முணர்த்து மவனை யுணரலு மாமே"

என்ற செய்யுளிலும் தமிழ்ச்சொல் வடசொல் என்ற இரண்டுமொழிகளும் உணர்த்தும் கடவுளை நாம் அறியவேண்டும் என்று கூறி அம்மொழிகளின் சமநிலையை வற்புறுத்துகின்றார்.

மேற்சொல்லியபிரகாரம் பழையநூல்களிலிருந்தே இத்தென்னாட்டில் வளர்ந்து ஓங்கி அபிவிருத்திபெற்றிருக்கும் நாகரிகமானது ஒன்றேயல்லாது வேறுபட்டுநிற்கும் இரண்டு அல்லவென்று ஏற்படுமாகில் அம்முடிவுக்கு அவைகளுக்குப்பிறகு நாளிதுவரை இயற்றப்பட்டு வழங்கிவரும் பற்பலநூல்களிலிருந்து மேற்கோள்கள் எடுத்துக்கூறுவது அவசியமின்றாம்.

தற்காலத்தில் வடமொழிக்கும் தென்மொழிக்கும் ஒரு முரண் இருப்பதாகவும் திராவிடநாகரிகம் ஆரியநாகரிகத்தினின்று வேறுபட்டதென்றும் திராவிடக்கலைகளை ஆரியக்கலைகளினின்று பிரித்து அபிமானித்தல்வேண்டுமென்றும் இன்னும் இவ்வாறு சிலவாதங்கள் சிற்சில இடங்களில் ஆதரவு பெற்றுவருகின்றன. இம்மனோநிலையானது நமதுதேசத்துப் பண்புக்கு முற்றும் மாறானது. இது ஐரோப்பாக்கண்டத்திலும், அக்கண்டத்தினின்று ஜனங்கள் குடியேறின அமெரிக்கக்கண்டங்களிலும் பரவிநிற்கும் நாகரிகத்தின் இலக்கணமாகும். அப் பச்சிமதேசங்களில் நிகழும் யுக்திவாதங்களாலும், ஒன்றோடொன்று எதிர்த்துநிற்கும் சுயதேச அபிமானங்களாலும், பொருள், அரசியல், சமூக அமைப்பு முதலிய துறைகளில் ஏற்பட்டுள்ள விரோதங்களாலும், அங்குப் பரவியிருக்கும் நாகரிகம் அடிப்படையில் அதிலுள்ள பிரிவுகள் ஒன்றுக்கொன்று போட்டியிட்டுப் பொருதலையே ஆதாரமாகக்கொண்டிருத்தலாலும் அத்தேசங்களின் நாகரிகமுறையைத் தழுவவேண்டுமென்றுவிரும்பும் இத்தேசத்தார் சிலரிடத்தும் இம்முரண்பாடுள்ள மனோநிலை பரவியிருக்கிறது.

அப்படியிருந்தாலும் ஆங்கிலதேசத்தில் இப்பொழுது வழங்கிவரும் ஆங்கிலபாஷையிலே சென்ற மூன்று நான்கு நூற்றாண்டுகளுக்குமுன் அதன் தற்காலத் தோற்றத்திற்கு ஆதாரமாயுள்ள ஆங்கில சாக்ஸன் பாஷையையும் நார்மன் பிரெஞ்சு பாஷையையும் கிரேக்கு லத்தீன் முதலிய பாஷைகளையும் பிரித்து, அவைகளைச் சேர்ந்த மொழிகளை வேறுபடுத்தமுயன்றால் அது

சாத்தியமன்று. அதுபோலவே அப்பாஷைகளாற் குறிக்கப்படும் நாகரிகங்களைத் தற்கால ஆங்கிலேய நாகரிகத்தின்று வேறுபடுத்தமுயல்வதும் சாத்தியமன்று. அப்படிப் பிரிக்கவும், பூர்வத்தில் ஆங்கில சாக்ஸர்களில் நடைபெற்ற நாகரிகத்தையே இப்பொழுதும் ஆங்கிலேயர்கள் வேறுபடுத்தித் தழுவி ஆதரிக்கவும் யாதொரு இயக்கமும் இக்காலத்தில் உண்டாகவில்லை. அவ்விதம் ஓரியக்கத்தை யாராவது ஸ்தாபிக்கமுயன்றால் அது நகைக்கிடமாகும். இவ்விதம் சென்ற சில நூற்றாண்டுகளிலே சமீபகாலத்திற்குள் தோன்றியிருக்கும் பாஷைகளின் கலப்பையும் நாகரிகங்களின் ஒற்றுமையையும் வேறுபடுத்துவது செய்தற்கு அரிதாயிருப்பின், பல்லாயிர வருஷங்களாக அன்பையும் சமரசத்தையும் கைக்கொண்டு ஜனசமூகத்தின் நாகரிகத்தை ஐக்கியப்படுத்தியும் ஐக்கியப்படுத்திக்கொண்டும் வரும் இந்நாட்டில் அவசியமற்ற பிளவுகளை உண்டு பண்ணுதல் இதுவரை நடைபெற்றுவந்த முறைக்கு முற்றும் விரோதமாயிருக்கும். துவேஷம் அல்லது வெறுப்பு என்ற மனப்பண்பானது நமது தேசத்தில் வழங்கிவரும் நாகரிகத்தின் உயிர்நிலைக்கு முழுதும் புறம்பானது.

"அன்பின் வழிய துயிர்நிலை யஃதிலார்க்
கென்புதோல் போர்த்த வுடம்பு"

என்று திருவள்ளுவநாயனார் கூறுகின்றார். அன்பு இலாதாரின் உடம்பு என்பும் தோலும் போர்த்த உயிரற்ற உடம்பென்று கூறுகின்றார். அது போலவே,

"அன்புஞ் சிவமு மிரண்டென்ப ரறிவிலார்
அன்பே சிவமாவ தாரு மறிகிலார்
அன்பே சிவமாவ தாரு மறிந்தபின்
அன்பே சிவமா யமர்ந்திருந் தாரே"

என்று திருமூலரும் மொழிகின்றார்.

இந்நாட்டில் வெறுப்புக் குன்றி அன்பு வளர்ந்து ஓங்குக!

II. செந்தமிழ்ப்பிரசுரம்.

1	ஐந்திணையைம்பது (உரையுடன்)	0	4	0
2.	கணநூல் (5) இனியநாற்பது (உரையுடன்)	0	3	0
3.	*வளையாபதிச்செய்யுட்கள்			
4.	புலவராற்றுப்படை	0	3	0
6	*நேமிநாதம் (உரையுடன்)			
7.	திருநூற்றந்தாதி (உரையுடன்)	0	6	0
8.	திணைமாலை நூற்றைம்பது (உரையுடன்)	0	8	0
9.	அநுமானவிளக்கம்	0	10	0
10.	அட்டாங்கயோகக்குறள்	0	2	0
11.	*விவசாயரசாயன சாஸ்திரச்சுருக்கம்			
12.	*பன்னிருபாட்டியல்			
13.	நான்மணிக்கடிகை (பழைய உரை)	0	4	0
14.	முத்தொள்ளாயிரச்செய்யுட்கள்	0	3	0
15.	*திருச்செந்திற்கலம்பகம்			
16.	திருவாரூருலா	0	8	0
17.	சுகசந்தர்சனதீபிகை	0	12	0
18.	இயற்கைப்பொருட்பாடம்...	0	4	0
19.	தேவையுலா	0	3	0
20.	*நரிவிருத்தம்			
21.	சிதம்பரப்பாட்டியல் (உரையுடன்)	0	8	0
22.	*திருக்கலம்பகம் (ஷை)			
23.	*விக்கிரமசோழனுலா			
24.	குருமொழிவினாவிடை	0	1	0
25.	கேசவப்பெருமாள் இரட்டைமணிமாலை	0	2	0
26.	திருத்தணிகைத்திருவிருத்தம்	0	1	0
27.	மதுரைத்திருப்பணிமாலை	0	8	0
28.	*சந்திராலோகம்			
29.	*சோழவம்சசரித்திரச்சுருக்கம்			
30.	ஞானாமிர்தக்கட்டளை	0	3	0
31.	*பாண்டியம்			
32.	மநீஷாபஞ்சகம்	0	8	0
33	*வேளிர்வரலாறு			
34.	*அகப்பொருள்விளக்கம்			
35.	*திருமந்திரநூறுபாட்டுக்குரை			
36.	உவமானசங்கிரகம்	0	1	0
37.	மாறனலங்காரம் மூலமும் உரையும்	4	8	0
38.	திருப்புல்லாணிமாலை	0	2	0
39.	*பழமொழி மூலமும் பழையஉரையும் (முதல் 100 செய்)			
40.	திருமாலிருஞ்சோலைமலை அழகர்பிள்ளைத்தமிழ்	0	8	0
41.	பொருட்டொகைநிகண்டு	0	6	0
42.	அகராதிநிகண்டு	0	12	0

43.	மேகவிடுதூது	0	2	0
44.	திருக்குற்றாலமாலை	0	2	0
45.	தண்டலையார்சதகம்	0	4	0
46.	இராமோதந்தம்	0	3	0
47.	பழமொழிமூலமும் பழைய உரையும் (2-வது 100செய்)	1	0	0
48.	சேதுநாடும் தமிழும்	0	6	0
49.	*கடைவள்ளலார்காலம்			
50.	*தமிழரும் ஆந்திரரும்			
51.	*மதங்கசூளாமணி			
52.	கூடற்புராணம்	0	10	0
53.	திருவள்ளுவர் (தமிழ்)	0	6	0
	ஷை (ஆங்கிலம்)	0	6	0
54.	அரும்பொருள்விளக்கநிகண்டு	1	4	0
55.	மாறனகப்பொருளும் திருப்பதிக்கோவையும் ...	0	12	0
56.	பாப்பாவினம்	0	10	0
57.	மதுரைமும்மணிக்கோவை	0	5	0
58.	பழனிப் பிள்ளைத்தமிழ்	0	3	0
59.	கடம்பர்கோயில் உலா	0	6	0
60.	சங்கரநயினார்கோயில்அந்தாதி	0	6	0
61.	கலைசைக்கோவை	0	12	0
62.	பெருந்தொகை	5	0	0
63.	சூடிக்கொடுத்தநாய்ச்சியார்தோத்திரப்பாமாலை ...	0	5	0
64.	சிராமலைக்கோவை	0	12	0
65.	மத்யமவியாயோகம்	0	2	0
66.	*சந்திரகுப்தன்			
67.	அமிர்தரஞ்ஜனி	0	2	0
68.	திருமுருகாற்றுப்படை	0	10	0

* இவ்வடையாளமிடப்பட்டவை இப்போது கைவசமில்லை.

குறிப்பு:-1. சங்கத்தினின்று மாதமொருமுறை அரிய பெரிய விஷயங்களைக்கொண்டுவெளியாகிவரும் இச்" செந்தமிழ் "ப்பத்திரிகைக்கு வருஷசந்தா ரூ 4. தனிப்பிரதியின் கிரயம் அணா 8. வெளிநாடுகளுக்கு வருஷசந்தா ரூ 4—8—0. இதுவரை 40 தொகுதிகள் பூர்த்தியாயிருக்கின்றன. இவற்றுள் 1, 2, 3, 6, 7, 8, 9, 10, 16-ம் தொகுதிகள் கைவசமில்லை. பைண்டு செய்யப்பெறாததொகுதிகள் தொகுதி 1-க்கு ரூ 4—0—0-வீதமும், பைண்டு செய்யப்பெற்ற தொகுதிகள் தொகுதி 1-க்கு ரூ 5—0—0 வீதமும் விற்கப்பெறும். வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

2. சங்கப்பிரசுரம், செந்தமிழ்ப்பிரசுரம், செந்தமிழ் முழுத்தொகுதி— இவற்றுள் ஒவ்வொருபுத்தகத்திலும் ஒரேதடவையில் 10 பிரதிகளும் அதற்குமேற்பட்டும் வாங்குவோர்கட்கு மொத்தக்கிரயத்தொகையில் 100க்கு 10 வீதம் கமிஷன் தள்ளிக்கொடுக்கப்படும்.

3. சங்கப்பதிப்புப்புத்தகங்களை, ஒரு ரூபாய்க்கும் அதற்கு மேற்பட்டும் வாங்குவோர்கட்கு, ரூபா ஒன்றுக்கு அரை அணா வீதம் கமிஷன் தள்ளிக்கொடுக்கப்படும்.

லக்ஷ்மீநாராயணையர், மானேஜர்.